
# தின பூமி

thinaboomi.com

பூமி: 26 சுற்று: 24 ஆனி 21

Regd. No.TN/WR/SLM(E)/14/2017-2019 RNI Regn. No. TNTAM/2001/4003

சேலம், சனி, ஜூலை 05, 2025 | சென்னை | மதுரை | திருச்சி | கோவை | நெல்லை | சேலம் | வேலூர் | புதுச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00

**பரபரப்பாக நடந்த வாக்கெடுப்பில் டிரம்பின் வரி மசோதா 4 வாக்குகள் வித்தியாசத்தில் நிறைவேற்றம்**

...2-ம் பக்கம்

**ஆபரேஷன் சிந்தூரின்போது 3 எதிரிகளை எதிர்கொண்டோம்: ராணுவ துணை தலைமை தளபதி**

...3-ம் பக்கம்

**டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் குறைந்த வயதில் சதம் அடித்து சச்சினை முந்திய சுப்மன் கில்**

...6-ம் பக்கம்





சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.10.57 கோடி செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள 52 அறைகளுடன் கூடிய பக்தர்கள் தங்கும் விடுதியை முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பி.கே.சேகர்பாபு, தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச்செயலாளர் க.மணிவாசன், ஆணையர் பி.என்.ஸ்ரீதர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### வேளாண்மை-உழவர் நலத்துறை சார்பில்

# ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்: முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைத்தார்

## ரூ.103.38 கோடியில் 52 புதிய கட்டிடங்களும் திறப்பு

சென்னை, ஜூலை 05-

**தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (4.7.2025) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை - உழவர் நலத்துறையின் சார்பில் `ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்' என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்து, 5 பயனாளிகளுக்கு காய்கறி விதைத் தொகுப்புகள், பழச்செடித் தொகுப்புகள் மற்றும் பயறு வகைத் தொகுப்புகளை வழங்கினார். மேலும், 103 கோடியே 38 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 முதன்மை பதப்படுத்தும் மையங்கள், 18 சேமிப்புக் கிடங்குகள், 3 வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், 3 வேளாண் சந்தை நுண்ணறிவு ஆலோசனை மையங்கள், 8 ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள், 10 துணை வேளாண் விரிவாக்க மையங்கள், 2 விதை சேமிப்புக் கிடங்குகள், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், 2 ஒருங்கிணைந்த விதைச் சான்று வளாகங்கள், அலுவலகக் கட்டிடம், மாணவர் விடுதி மற்றும் தரக் கட்டுப்பாடு/ பகுப்பாய்வகம் உள்ளிட்ட 52 கட்டிடங்களை திறந்து வைத்தார்.**

**உழவர் பெருமக்களுக்கு**

வேளாண்மைத் துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்திடும் வகையில் தமிழ் நாட்டின் வரலாற்றில் வேளாண்மைத் துறைக்கென 5 தனி நிதிநிலை அறிக்கைகள் தாக்கல் செய்து, ரூ.1,94,076 கோடியில் பல்வேறு நலத் திட்டங்கள், உழவர்களின் நலனை பேணும் வகையில் வேளாண்மைத் துறை என்ற பெயரினை வேளாண்மை – உழவர் நலத்துறை எனப் பெயர் மாற்றம் செய்து, வேளாண் பெருமக்களின் வருவாயினை உயர்த்திட கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச விவசாய மின் இணைப்புகள், இயற்கை வேளாண்மையை ஊக்குவித்திட முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், விவசாயிகள் தங்கள் விளை நிலங்களின் மண்வளத்தினை அறிந்திட தமிழ் மண் வளம் இணையதளம், வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம், உழவர் பெருமக்களுக்கு வேளாண் உபகரண தொகுப்புகள் வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

**ரூ.18 கோடியே 67 லட்சம்....**

ஊட்டச்சத்துகளை அளிப்பதில் காய்கறிகள், பழங்கள், பயறுவகைகள், சிறு தானியங்கள் பெரும்பங்காற்றுகின்றன. ஊட்டச்சத்து வழங்கும் இந்த விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரித்து ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை உறுதி செய்வதுடன், உழவர்களின் வருமானத்தை உயர்த்தும் வகையில் “ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்”

(கடைசி பக்கம் பார்க்க)

### அரசு ஊழியர்களின் கோரிக்கை ஏற்பு:

# ஈட்டிய விடுப்பு சரண் வரும் அக்டோபர் 1 முதல் அமல்

சென்னை, ஜூலை 05-

**தமிழக அரசு ஊழியர்களுக்கு ஈட்டிய விடுப்பு சரண், வரும் அக்டோபர் 1-ம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.**

வரும் 2026-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதி முதல் அமலாகும் என நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் முன்கூட்டியே ஈட்டிய விடுப்ப சரண் நடைமுறைக்கு வருகிறது.

அரசு ஊழியர்களின் கோரிக்கையை ஏற்று, வரும் அக்டோபர் 1ஆம் தேதி முதல் இந்த திட்டம் நடைமுறைப் படுத்தப்படவிருப்பதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

கொரோனா பெருந் தொற்று காலத்தில், அரசின் நிதிநிலையின் மீது ஏற்பட்ட பெரும் சுமையின் காரணமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த அரசு அலுவலர்களுக்கான ஈட்டிய விடுப்பை சரண் செய்யும் நடைமுறை அடுத்த ஆண்டு ஏப். 1 முதல் செயல்படுத்த 2025-26 நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இந்த நிலையில், கடந்த ஏப்ரல் மாதம் சட்டப்பேரவையில் விதி 110-ன் கீழ் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆற்றிய உரையில், இந்த அறிவிப்பை நிகழாண்டே செயல்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதைப் பரிசீலித்து, ஈட்டிய விடுப்பு நாள்களில், 15 நாள்கள் வரை சரண் செய்து பணப் பலன் பெறும் நடைமுறை வரும் அக். 1 முதல் அமலுக்கு வரும். இதன்மூலம், சுமார் 8 லட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் பயன்பெறுவர்.

இந்த அறிவிப்பைச் செயல்படுத்த ஆண்டுக்கு ரூ.3,561 கோடி கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும் என்று அறிவித்திருந்தார்.

இதன்படி, அக். 1ம் தேதி முதல் ஈட்டிய விடுப்பு சரண் செய்யும் நடைமுறை அமலக்கு வரவிருக்கிறது என்று தமிழக அரசு நேற்று அறிவித்துள்ளது.

### டிரினிடாட் - டொபாகோ பிரதமருக்கு

# கும்பமேளா புனிதநீரை பரிசாக வழங்கினார் பிரதமர் மோடி



போர்ட் ஆப் ஸ்பெயின், ஜூலை 05-

**டிரினிடாட்- டொபாகோ நாட்டுக்கு சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி, அந்நாட்டின் பிரதமர் கமலா பெர்சாத்-பிஸ்ஸேசருக்கு மகாகும்பமேளாவின் புனித நீரையும், ராமர் கோயிலின் மாதிரி நினைவுச் சின்னத்தையும் பரிசாக வழங்கினார்.**

அரசுமுறை பயணமாக டிரினிடாட் - டொபாகோ நாட்டுக்குச் சென்றுள்ள பிரதமர் மோடியை, பியார்கோ சர்வதேச விமான நிலையத்தில் அந்நாட்டின் பிரதமர் கமலா பெர்சாத்-பிஸ்ஸேசர் மற்றும் அமைச்சர்கள் வரவேற்றனர்.

இதுகுறித்து பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

‘பிரதமர் கமலா பெர்சாத்-பிஸ்ஸேசர் நடத்திய விருந்தில், அயோத்தியில் உள்ள ராமர் கோயிலின் மாதிரி நினைவுச் சின்னத்தையும், பிரயாக்ராஜில் நடைபெற்ற மகா கும்பமேளாவிலிருந்து எடுத்து வந்த புனித நீரையும் நான் வழங்கினேன். இவை இந்தியாவிற்கும் டிரினிடாட் - டொபாகோவிற்கும் இடையிலான ஆழமான கலாச்சார மற்றும் ஆன்மிக பிணைப்புகளை அடையாளப்படுத்துகின்றன’ எனக் குறிப்பிட்டார்

இதனை தொடர்ந்து டிரினிடாட் & டொபாகோவில் உள்ள இந்திய சமூகத்தினரிடையே உரையாற்றிய பிரதமர் மோடி, பிரதமர் கமலா பெர்சாத்-பிஸ்ஸேசரை ‘பிஹாரின் மகள்’ என்று அழைத்தார்,

மேலும், கமலா பெர்சாத்தின் மூதாதையர்களுக்கு பிஹாருடன் உள்ள உறவுகளையும் அவர் நினைவு கூர்ந்தார்.

### பல்கலை., துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பான

# தமிழக அரசின் மேல்முறையீட்டு வழக்கில் கவர்னருக்கு நோட்டீஸ்

## 4 வாரங்களுக்குள் பதிலளிக்க சுப்ரீம் கோர்ட் உத்தரவு

டெல்லி, ஜூலை 05-

**பல்கலை., துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பான தமிழக அரசின் மேல்முறையீட்டு வழக்கில் தமிழக கவர்னருக்கு சுப்ரீம் கோர்ட் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.**

பல்கலைக்கழக துணை வேந்தர்கள் நியமனம் தொடர்பான வழக்கில் கவர்னருக்கு சுப்ரீம் கோர்ட் நோட்டீஸ் அனுப்பி உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை, மாநில அரசுக்கு வழங்கி, தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு, சுப்ரீம் கோர்ட் தனது சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒப்புதல் அளித்தது. இதனை எதிர்த்து, சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த, நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன் மற்றும் லட்சுமி நாராயணன் அமர்வு, தமிழ்நாடு அரசு இயற்றிய சட்டத்திற்கு இடைக் கால தடை விதித்தது.

இந்த நிலையில் துணை வேந்தர் நியமன சட்டப் பிரிவுகளுக்கு இடைக்காலத் தடை விதித்தை எதிர்த்து தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்துள்ளது. அதில், ‘‘உயர் நீதிமன்ற விடுமுறை கால அமர்வில் மிக மிக அவசர வழக்கை மட்டுமே விசாரிக்க வேண்டும் என்ற விதி உள்ளது. ஆனால், அரசியல் சாசன கேள்விகள் எழும் இந்த முக்கிய வழக்கில் அவசர அவசரமாக விடுமுறை கால அமர்வு இடைக்கால உத்தரவை பிறப்பித்து இருக்கிறது. இது சட்டத்திற்கு புறம்பானது. அரசு தரப்பு தனது நியாயமான வாதங்களை எடுத்து வைக்க உரிய கால அவகாசம் வழங்கப்படாமல் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக விடுமுறை கால அமர்வு தனது பணி நேரத்தை தாண்டி மாலை 6.30 மணி வரை வழக்கை விசாரித்து அவசர அவசரமாக இடைக்கால உத்தரவை பிறப்பித்துள்ளது’’ என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் ஆவணங்கள் பல உண்மைக்கு மாறானவை தாக்கல் செய்யப்பட்டுள்ளன என அரசு சுட்டிக் காட்டியதோடு, அது தொடர்பாக உரிய ஆவணங்களை தாக்கல் செய்யவும் அரசு தரப்பில் அவகாசம் கோரியபோது உரிய கால அவகாசத்தை நீதிமன்றம் வழங்கவில்லை என்றும், தற்போது துணைவேந்தர் இல்லாமல் பல்கலைக் கழகங்கள் செயல்பட்டு வருகிறது, இது மேலும் காலதாமதத்தை ஏற்படுத்தும். ஆகவே சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நீதிபதிகள் பி.வி.நரசிம்மா, ஆர்.மகாதேவன் அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் அபிஷேக் சிங்வி, வில்சன் ஆகியோர் ஆஜராகி வாதம் செய்தனர். அதில்,’’துணைவேந்தர் நியமன வழக்கு ஏற்கனவே சுப்ரீம் கோர்ட்டில் நிலுவையில் உள்ள நிலையில், உயர்நீதிமன்றம் தடை விதித்தது தவறானது. சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு விசாரணைக்கு தடை விதிக்க வேண்டும்,’’இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து மத்திய அரசு, கவர்னர் மாளிகை, யு.ஜி.சி. மற்றும் எதிர்மனுதாரர்கள் அனைவரும் 4 வாரங்களுக்குள் பதிலளிக்க நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

# கை விரல் ரேகை பதியாதவர்களின் ரேஷன் கார்டுகள் செல்லாதா..?

## தமிழ்நாடு அரசு விளக்கம்

சென்னை, ஜூலை 05-

**வரும் ஜூன் 30-ம் தேதிக்குள் கை விரல் ரேகை பதியாதவர்களின் ரேஷன் கார்டுகள் செல்லாது என சமூக வலைத்தளங்களில் பரவி வரும் தகவல்களுக்கு தமிழக அரசு விளக்கமளித்துள்ளது.**

தஞ்சாவூர் மாவட்டத்தில் வாட்ஸ்அப் உள்ளிட்ட ஊடகங்களில் தகவல் ஒன்று பரவி வருகிறது. அதில் "தஞ்சாவூர் மக்களே ஜூன் 30-ந்தேதிக்குள் ரேஷன் கார்டுடன் ஆதார், மொபைல் எண், கைரேகை, இறந்தவர் பெயர் நீக்கம் போன்றவற்றை அப்டேட் செய்யாவிட்டால் ரேஷன் கார்டு செல்லாது" என்று அதில் கூறப்பட்டுள்ளது.

இது உண்மையா? பொய்யா? என்று தெரியாமல் தஞ்சாவூர் மக்கள் குழப்பம் அடைந்துள்ள நிலையில், இதுகுறித்து தமிழக அரசின் தகவல் சரிபார்ப்பகம் அதற்கு விளக்கம் அளித்துள்ளது. அதில், "இது தவறான தகவலாகும். ஏ.ஏ.ஒய். மற்றும் பி.எச்.எச். குடும்ப அட்டைதாரர்கள் கட்டாயமாக அனைத்து குடும்ப உறுப்பினர்களின் கை விரல் ரேகையை பதிவு செய்வது அவசியம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதற்கான கடைசி தேதி வரையறுக்கப்படவில்லை. சமூக ஊடகத்தின் மூலம் வரப்பெற்ற செய்தியில் உண்மை ஏதுமில்லை என்று தஞ்சாவூர் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் தெரிவித்துள்ளார். தவறான தகவலைப் பரப்பாதீர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஓராண்டில் 17,702 பேர் தேர்வு: டி.என்.பி.எஸ்.சி. தகவல்

சென்னை, ஜூலை 05-

**டி.என்.பி.எஸ்.சி. மூலம் கடந்த ஓராண்டில் 17,702 பேர் பல்வேறு அரசுப் பணிகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ளது.**


இது தொடர்பாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (டி.என்.பி.எஸ்.சி.) செயலாளர் எஸ்.கோபால சுந்தரராஜ் வெளியிட்ட செய்திக் குறிப்பு ‘ 2026 ஜனவரிக்குள் டி.என்.பி.எஸ்.சி. வாயிலாக 17,595 காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும் என கடந்த 2024-ம் ஆண்டு சட்டப்பேரவையில் அரசு அறிவித்திருந்தது.

தேர்வர்களின் நலன் கருதி டி.என்.பி.எஸ்.சி., தேர்வு பணிகளை துரிதப்படுத்தி 2024 ஜூன் முதல் 2025 ஜூன் வரை பல்வேறு அரசு துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு 17,702 பேரை தேர்வு செய்துள்ளது. தமிழக அரசு 2026 ஜனவரி வரை நிர்ணயித்த இலக்கை டி.என்.பி.எஸ்.சி. 7 மாதங்களுக்கு முன்பாகவே எட்டியுள்ளது. மேலும் பல்வேறு தேர்வுகளின் முடிவுகள் வெளியிடப்பட்டு 2500-க்கும் மேற்பட்ட பணியிடங்களை நிரப்புவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

குருப்6-ஏ தேர்வு: குருப்6-ஏ பணிககளில் அடங்கிய தலைமைச் செயலக உதவி பிரிவு அலுவலர் (சட்டம்-நிதித்துறை நீங்கலாக) பதவிகளை நிரப்புவதற்கான கணினிவழி சான்றிதழ் சரிபார்ப்புக்கு தற்காலிமாக அனுமதிக்கப்பட்ட தேர்வர்களின் பட்டியல் தேர்வாணையத்தின் இணையதளத்தில் (www.tnpsc.gov.in) வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (டிப்ளமா, ஐ.டி.ஐ. கல்வித்தகுதி கொண்ட பதவிகள்) பதவிகளை (திட்ட உதவியாளர், இளநிலை வரைதொழில் அலுவலர், தொழில் நுட்ப உதவியாளர் ) நிரப்புவதற்கான 3-வது கட்ட அசல் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு ஜூலை 9 மற்றும் 10-ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கு அழைக்கப்பட்டுள்ள தேர்வர்களின் பதிவெண்கள் அடங்கிய பட்டியல் தேர்வாணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது’ என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| 193.42 | 55.70 |
| பாயின்ட் 83,432.89 | பாயின்ட் 25,461.00 |



**தங்கம்**
1 சவரன் ₹72,400
1 கிராம் ₹9,050



**வெள்ளி**
1 கிலோ ₹120,000
1 கிராம் ₹120.00

**டாலர்** ₹85.45

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



### பரபரப்பாக நடந்த வாக்கெடுப்பில்
# அதிபர் டொனால்ட் டிரம்பின் வரி மசோதா 4 வாக்குகள் வித்தியாசத்தில் நிறைவேற்றம்

**வாஷிங்டன், ஜூலை 05-**

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிமுகம் செய்த 'பிக் பியூட்டிபுல் பில்' எனப்படும் வரி மற்றும் செலவு மசோதா காங்கிரசில் குறுகிய பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

வியாழக்கிழமை நடந்த பரபரப்பான வாக்கெடுப்பில், மசோதாவுக்கு ஆதரவாக 218 வாக்குகளும் எதிராக 214 வாக்குகளும் பதிவாகின. எனவே 4 வாக்குகள் வித்தியாசத்தில் மசோதா வெற்றி பெற்றது.



இந்நிலையில் அமெரிக்க சுதந்திர தினமான நேற்று (வெள்ளிக்கிழமை) மாலை 5 மணிக்கு அதிபர் டிரம்ப், மசோதாவில் கையெழுத்திடுவார் என்று பத்திரிகை செயலாளர் கரோலின் லெவிட் கூறினார். இதன்மூலம் மசோதா சட்டமாக அமலுக்கு வரும். இந்த மசோதாவில் ராணுவ செலவினங்களை அதிகரித்தல், புலம்பெயர்ந்தோரை நாடுகடத்தும் திட்டத்திற்கு நிதியளித்தல் மற்றும் வரி நிவாரணத்தை நீட்டிக்க 4.5 டிரில்லியன் டாலர்களை ஒதுக்குதல் ஆகியவை முக்கிய அம்சங்கள் அடங்கும்.

இருப்பினும், இந்த மசோதா நாட்டின் கடனை மேலும் 3.4 டிரில்லியன் டாலர் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே நேரத்தில், ஏழைகளுக்கான உணவு உதவித் திட்டம் மற்றும் மருத்துவ உதவி சுகாதார காப்பீட்டுத் திட்டங்களில் பெரும் நிதி குறைப்புகள் ஏற்படும். இந்த மசோதா அமலானால் சுமார் 17 மில்லியன் மக்களின் காப்பீட்டுத் தொகையை இழக்க நேரிடும் என்று நிபுணர்கள் நம்புகின்றனர்.

# புதின் மீது ட்ரம்ப் அதிருப்தி

**வாஷிங்டன், ஜூலை 05-**

உக்ரைன் உடனான போரை ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் நிறுத்துவார் என்று தோன்றவில்லை என்றும் அவர் விஷயத்தில் தான் ஏமாற்றம் அடைந்துள்ளதாகவும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற அமெரிக்க அதிபர் தேர்தல் பிரச்சாரத்தின்போது, நான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் உடனடியாக உக்ரைன் - ரஷ்யா போரை நிறுத்துவேன்.'' என வாக்குறுதி அளித்தவர் டொனால்ட் ட்ரம்ப். இரண்டாவது முறையாக டொனால்ட் டரம்ப் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டு 6 மாதங்களுக்கு மேல் ஆகும் நிலையில், உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் போர் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. மீண்டும் அமெரிக்க அதிபரானதில் இருந்து போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக டொனால்ட் டரம்ப், விளாடிமிர் புதினுடன் 5 முறை தொலைபேசியில் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஒவ்வொரு முறை பேச்சுவார்த்தைக்கும்ப் பிறகும் மிகுந்த நம்பிக்கையை வெளிப்படுத்தி வந்த டொனால்ட் டரம்ப், கடைசியாக கடந்த வியாழக்கிழமை நடந்த பேச்சுவார்த்தைக்குப் பிறகு முதல்முறையாக ஏமாற்றத்தை வெளிப்படுத்தி உள்ளார். விளாடிமிர் புதினுடனான தொலைபேசி பேச்சுவார்த்தை குறித்து வெள்ளிக்கிழமை (ஜூலை 4) அதிகாலை செய்தியாளர்களிடம் பேசிய டொனால்ட் ட்ரம்ப், ''எங்கள் தொலைபேசி உரையாடல் நீண்ட நேரம் நடைபெற்றது.

ஈரான் உட்பட பல்வேறு விஷயங்களைப் பற்றி நாங்கள் பேசினோம். உக்ரைனுடனான போரைப் பற்றியும் பேசினோம். ஆனால், போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. இவ்விஷயத்தில் எனக்கு மகிழ்ச்சி இல்லை. விளாடிமிர் புதின் விஷயத்தில் நான் ஏமாற்றம் அடைந்துள்ளேன். உக்ரைன் மீதான போரை அவர் நிறுத்துவார் என்று தோன்றவில்லை என்று தெரிவித்துள்ளார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இஸ்ரேல் வான்வழி தாக்குதல்:
# காசாவில் 15 பேர் பலி

**காசா சிட்டி, ஜூலை 05-**

காசாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது. இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காசா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது.

இஸ்ரேல், ஹமாஸ் இடையேயான போரை 60 நாட்கள் தற்காலிகமாக நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் முன்மொழிந்துள்ளார். போரை தற்காலிகமாக நிறுத்த இஸ்ரேல் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும், போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஹமாஸ் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி வருகிறார். ஒப்பந்தத்தை ஹமாஸ் ஏற்றுக் கொண்டால் போர் நிறுத்தம் உடனடியாக அமலுக்கு வரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், காசா முனையில் நேற்று இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 15 பேர் உயிரிழந்தனர். அதே போல், காசா முனையில் நிவாரண பொருட்களை வாங்க காத்திருந்த பாலஸ்தீனியர்கள் மீது துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த துப்பாக்கி சூட்டில் 20 பேர் உயிரிழந்தனர். துப்பாக்கி சூடு நடத்தியது ஹமாஸ் ஆயுதக்குழுவினரா? இஸ்ரேல் பாதுகாப்புப்படையினரா?, நிவாரண பொருட்களை திருடிச்செல்லும் கொள்ளை கும்பலா? என்பது குறித்த விவரம் இதுவரை தெரியவில்லை.

# தங்கம் விலை சற்று சரிவு

**சென்னை, ஜூலை 05-**

தங்கம் விலை நேற்று சவரனுக்கு 440 ரூபாய் குறைந்து ஒரு சவரன் 72,400 ரூபாய்க்கும் விற்பனையானது.

சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப இந்தியாவில் தங்கத்தின் விலை அவ்வப்போது ஏற்ற, இறக்கத்தை சந்தித்து வருகிறது. பெரும்பாலும் தங்கம் விலை உயர்ந்தே காணப்படும். இதனை தொடர்ந்து கடந்த வாரம் தங்கம் விலை சவரனுக்கு 2,440 ரூபாய் குறைந்து ஒரு சவரன் ரூ.71,440-க்கும் விற்பனையானது.

இதனை தொடர்ந்து திங்கட்கிழமை சவரனுக்கு 120 ரூபாய் குறைந்து ஒரு சவரன் 71,320 ரூபாய்க்கு விற்பனையானது. இதையடுத்து மாத தொடக்க நாளான செவ்வாய்கிழமை சவரனுக்கு 840 ரூபாயும், கடந்த 3 நாட்களுக்கு முன் சவரனுக்கு 360 ரூபாயும், நேற்று முன்தினம் சவரனுக்கு 320 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ரூ.72,840-க்கு விற்பனையானது. கடந்த மூன்று நாட்களில் தங்கம் விலை சவரனுக்கு ரூ.1,520 உயர்ந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், நேற்று தங்கம் விலை குறைந்து விற்பனையானது. கிராமுக்கு 55 ரூபாய் குறைந்து ஒரு கிராம் 9,050 ரூபாய்க்கும் சவரனுக்கு 440 ரூபாய் குறைந்து ஒரு சவரன் 72,400 ரூபாய்க்கும் விற்பனையானது. வெள்ளி விலையும் குறைந்தது. கிராமுக்கு ஒரு ரூபாய் குறைந்து ஒரு கிராம் வெள்ளி 120 ரூபாய்க்கும் கிலோவுக்கு ஆயிரம் ரூபாய் குறைந்து பார் வெள்ளி 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனையானது.

# திருச்செந்தூர் கும்பாபிஷேக விழா: சண்முகர் விமான கலசத்திற்கு பூஜை





**திருச்செந்தூர், ஜூலை 05-**

கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு, திருச்செந்தூர் சண்முகர் விமான கலசத்திற்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் மகா கும்பாபிஷேகம் வருகிற 7-ந் தேதி (திங்கட்கிழமை) நடக்கிறது. இதை முன்னிட்டு மூலவர் சுப்பிரமணிய சுவாமி, பார்வதி அம்பாள், கரியமாணிக்க விநாயகர், வள்ளி, தெய்வானை அம்பாள் ஆகிய தெய்வங்களுக்கு கோவில் உள்பிரகாரத்தில் யாக பூஜைகள் நடைபெற்று வருகின்றன. இந்த யாகசாலை பூஜைகள் கடந்த 1-ந் தேதி தொடங்கி நடந்து வருகிறது.

நேற்று முன்தினம் காலையில் 4-ம் கால யாக சாலை பூஜைகள் நடைபெற்றன. இதில் தங்க முலாம் பூசப்பட்ட சுவாமி சண்முகர் விமான கலசத்திற்கு சிறப்பு பூஜை நடத்தப்பட்டு, பூர்ணாகுதி, மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதேபோல் மூலவர், வள்ளி, தெய்வானை ஆகிய விமான கலசங்களுக்கும் சிறப்பு பூஜைகள் நடந்தன. தொடர்ந்து யாகசாலை முன் தருமபுரம் ஆதீனம் 27-வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் 'திருச்செந்தூர் சுப்பிரமணிய கடவுள்' என்ற புத்தகத்தை வெளியிட்டார். மாலையில் 5-ம் கால யாகசாலை பூஜையும், தீபாராதனையும் நடந்தது. யாகசாலை முன் 12 பெண்கள் உள்பட 108 ஓதுவார் மூர்த்திகளால் தமிழ் வேதங்கள் ஓதப்பட்டன. பின்னர் மூலவர் விமானத்தில் வரகு நிரப்பிய கலசம் பொருத்தப்பட்டது. நேற்று காலையில் 6-ம் கால யாக சாலை பூஜைகள் மற்றும் தீபாராதனை நடைபெற்றன.

நேற்று முன்தினம் காலை நடந்த யாகசாலை பூஜையில் இந்து சமய அறநிலைய துறை அமைச்சர் சேகர்பாபு, மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், மாவட்ட கலெக்டர் இளம்பகவத், அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் பழனி, கோவில் தக்கார் அருள்முருகன், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஆல்பர்ட் ஜான், சண்முகையா எம்.எல்.ஏ., கோவில் இணை ஆணையர் ஞானசேகரன், திருச்செந்தூர் உதவி கலெக்டர் சுகுமாறன் உள்பட திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

### திபெத் விவகாரத்தில்
# இந்தியாவுக்கு சீனா எச்சரிக்கை

**பெய்ஜிங், ஜூலை 05-**


திபெத் விவகாரத்தில் தலையிடுவதை இந்தியா நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தியாவுக்கான முக்கிய செய்தியை வெளியிட்டுள்ள சீன வெளியுறவு அமைச்சகம், ''உள்நாட்டு விவகாரங்களில் தலையிட திபெத் பிரச்சினையைப் பயன்படுத்துவதை இந்தியா நிறுத்தும் என்று சீனா நம்புகிறது. மேலும், இரு நாடுகளுக்கு இடையேயான உறவின் வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்துவதை இந்தியா தவிர்க்கும் என்றும் நம்புகிறது.'' என்று தெரிவித்துள்ளது.

திபெத்திய புத்த மதத் தலைவரான 14-வது தலாய் லாமா இந்தியாவில் தஞ்சம் அடைந்து, இமாச்சலில் உள்ள தர்மசாலாவில் வசித்து வருகிறார். அவர் தனது 90-வது பிறந்தநாளை முன்னிட்டு வெளியிட்ட அறிவிப்பில், ''எனது மறைவுக்கு பிறகும் தலாய் லாமா மரபு தொடரும். அடுத்த தலாய் லாமாவை அங்கீகரிக்கும் அதிகாரம் காடன் போட்ராங் அறக்கட்டளைக்கு மட்டுமே உள்ளது'' என்று கூறியிருந்தார்.

இதற்கு சீனா எதிர்ப்பு தெரிவித்தது. இதுகுறித்து சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மாவோ நிங் கூறுகையில், ''தலாய் லாமா உள்ளிட்ட பவுத்த தலைவர்களை தேர்ந்தெடுக்கும் நடைமுறைகளுக்கு சீன அரசின் ஒப்புதலும் அங்கீகாரமும் அவசியம்'' என தெரிவித்திருந்தார்.

**05-07-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** காதல் உறவு கனிந்து களிப்புறும் நாள். மனைவி மூலம் நன்மையும், மகிழ்வும் பெருகும். பிறரிடம் பணிவுடன் இருந்தால், பெறும் பயன்கள் அதிகரிக்கும். அரசால் அனுகூலங்கள் உண்டு.

**ரிஷபம்:-** எல்லா நலன்களும் தரும் ஏற்றமிகு நாள். பெயரும், புகழும் உயர்ந்து பெருமை சேரும். தொழிலில் தனவரவு ஏற்படும். உனக்கு என்னையா ராஜா ! என உறவுகள் உரைக்கும் உன்னத நாள்.

**மிதுனம்:-** எங்கே நிம்மதி ? என இன்னல் இருந்தாலும், பின்னர் தினமும், சுகம் தந்து ஏற்றம் மிகும் இனிய நாள். புதிய தோழிகள் தோழமை கிடைத்தால் மகிழ்ச்சிதானே ? விரும்பியது எதுவாகினும் விரைந்து நடக்கும் .

**கடகம்:-** மனக் கலக்கம், வீண் செலவுகள் ஏற்படலாம். பயணங்களில் தடங்கல்கள் ஏற்படும். தாய்க்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். இந்த நாள் இனிய நாளாக இறைவனை இறைஞ்சுவதைத் தவிர வழியேதும் இல்லை.

**சிம்மம்:-** எதிர்பார்த்த இனங்களில் இருந்து தடையின்றி தனவரவு அதிகரிக்கும். புத்தி தெளிவு பெற்று ஆதாயம் தரும் புதுப்புது சிந்தனைகள் தோன்றும்.பொருட்கள் பத்திரப்படுத்தி வைத்தால் இழப்புகளைத் தவிர்க்கலாம்.

**கன்னி:-** பிள்ளைகள் படிப்பில் கவனம் செலுத்துங்கள். வம்பு, வழக்கு மற்றும் வாக்குவாதங்களை தவிர்க்கவும். புதிய உற்சாகம் பிறக்கும். மனைவியின் உதவி மனதை லேசாக்கும்.

**துலாம்:-** மனத் திருப்தி மற்றும் தனவரவு ஏற்படும். வாக்கு வன்மையால் வளம் பெருகும். நோக்கும் இடமெல்லாம் ஒளி மிக்க வழி தெரியும் முன்னேற்றமான நாள். மனச்சோர்வும், உடல் சோர்வு ஏற்படலாம் .

**விருச்சிகம்:-** புத்தி தெளிவின்மையால் நிம்மதியற்ற நிலை தென்பட்டாலும், பின்னர் புதுத் தெம்பும், புத்தொளியும் ஏற்படும். ஆராய்ச்சி மனப்பான்மையால் ஆதாயம் உண்டு. எதிர்பாராத பணவரவு உண்டு. காரியமெல்லாம் எல்லாம் நன்மையாக முடியும். 12

**தனுசு:-** தனலாபமும், எல்லா வகையிலும் நன்மையும் ஏற்படும். மனைவியால் இலாபங்கள் ஏற்படும். பிறருக்கு உதவி புரிவதால் மகிழ்ச்சி அடைவீர்கள். வீட்டின் கதவை வெற்றிகள் தட்டும்.

**மகரம்:-** பணியில் பணிவும், துணிவும் இருந்தால் முன்னேற்றம் ஏற்படும். பெண்களால் இலாபமும், போகமும் உண்டு. விருந்தோம்பலால் மனம் மகிழும். பிரிந்தவர் கூடுவர். பிரிந்தவர் கூடினால் பேரின்ப மன்றோ?

**கும்பம்:-** மனதில் அமைதியும், தெய்வீகத் திருப்பணிகளில் ஈடுபாடு நிலவும். சுகம், சந்தோஷம் மற்றும் உல்லாசப் பயணங்கள் ஆகியவை ஏற்படும். அரசு ஆதரவும், பெரியோரால் நன்மைகளும் உண்டு.

**மீனம்:-** ஆரோக்கியக் குறைவினால் நிம்மதியற்ற நிலை ஏற்படும். மனைவியின் கலகத்தால் உறவுகளிடையே பிரச்சனைகள் எழலாம். விரும்பியபடி எதுவும் நடக்காது. தன் பணிவின்மையால் கஷ்டப்பட நேரும்.

### போதைப்பொருள் வழக்கில்
# நடிகர்கள் ஸ்ரீகாந்த், கிருஷ்ணா ஜாமீன் மனுக்கள் தள்ளுபடி

**சென்னை, ஜூலை 05-**

போதைப்பொருள் வழக்கில் நடிகர்கள் ஸ்ரீகாந்த், கிருஷ்ணாவின் ஜாமீன் மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

கொகைன் போதைப்பொருள் பயன்படுத்திய வழக்கில், நடிகர்கள் ஸ்ரீகாந்த், கிருஷ்ணா ஆகியோர் சென்னை நுங்கம்பாக்கம் போலீசாரால் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டனர். நடிகர் ஸ்ரீகாந்தை ஜூலை 7-ந்தேதி வரை நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்க கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

இதற்கிடையே தனக்கு ஜாமீன் கோரி சென்னை போதைப்பொருள் தடுப்பு சிறப்பு கோர்ட்டில் ஸ்ரீகாந்த் மனு தாக்கல் செய்து இருந்தார். அதேபோல, இதே வழக்கில் கைதான மற்றொரு நடிகர் கிருஷ்ணாவும் தனக்கு ஜாமீன் அளிக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்து இருந்தார். இந்த மனுக்களை விசாரித்த சிறப்பு கோர்ட்டு, நடிகர்கள் ஸ்ரீகாந்த், கிருஷ்ணா ஆகியோரின் ஜாமீன் மனுக்களை தள்ளு படி செய்து உத்தரவிட்டது.

இந்த நிலையில், நடிகர்கள் ஸ்ரீகாந்த் மற்றும் கிருஷ்ணாவுக்கு போதைப்பொருட்களை விநியோகம் செய்த வழக்கில் அரவிந்த் பாலாஜி, சுபாஷ் ஆகிய மேலும் 2 பேரை அரும்பாக்கம் போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கைது செய்யப்பட்ட இருவரும் போதைப்பொருள் சப்ளையர் கெவினின் கூட்டாளிகள் என போலீசார் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

# 550 ட்ரோன்கள், ஏவுகணைகளை வீசி உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல்

**கீவ், ஜூலை 05-**

உக்ரைன் மீது ட்ரோன்கள் மற்றும் ஏவுகணை வீசி ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ள நிலையில் அங்கு பதற்றம் அதிகரித்துள்ளது.

உக்ரைன் மீது நேற்று முன்தினம் ஒரே இரவில் 550 ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை வீசி ரஷ்யா தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது. போர் தொடங்கியதில் இருந்து உக்ரைன் மீது நடத்தப்பட்ட மிகப்பெரிய வான்வெளித் தாக்குதல் இதுவாகும். இத்தாக்குதலில் கீவ் நகரில் மட்டும் 23 பேர் படுகாடமடைந்தனர். ஒருபக்கம் உக்ரைன் மீதான போரை முடிவுக்கு கொண்டுவர ரஷ்ய அதிபர் புதினுடன், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். மறுபக்கம் உக்ரைன் மீதான தாக்குதலை மேலும் தீவிரமாக்கியுள்ளது ரஷ்யா.

உக்ரைன் மீது ரஷ்யா நேற்று முன்தினம் இரவு முழுவதும் 550 ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது. உக்ரைன் தலைநகர் கீவை குறிவைத்து நடத்தப்பட்ட இந்த ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களில் 23 பேர் காயமடைந்தனர். இந்த மிகப்பெரிய வான்வெளி தாக்குதலில் பயன்படுத்தப்பட்டதில் பெரும்பாலானவை ஷாஹெட் ட்ரோன்கள் என்றும், இதில் சுமார் 11 ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டதாகவும் உக்ரைனின் விமானப்படை தெரிவித்துள்ளது.

நேற்றைய ரஷ்ய தாக்குதல் கீவை மட்டுமல்ல, டினிப்ரோ, சுமி, கார்கிவ், செர்னிஹிவ் உள்ளிட்ட பகுதிகளையும் பாதித்தது. தற்போது வரை, 23 பேர் காயமடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. முன்னதாக, கடந்த வாரம் ரஷ்யா உக்ரைன் மீது 537 ட்ரோன்கள் மற்றும் 60 ஏவுகணைகளை வீசித்தாக்கியது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் மீண்டும் மிகப்பெரிய தாக்குதலை ரஷ்யா தொடுத்துள்ளதால், உக்ரைன் முழுவதும் பதற்றம் அதிகரித்துள்ளது.

### திருப்பூர் மாவட்டம்
# புதுப்பெண் தற்கொலை வழக்கில் மாமியார் கைது

**திருப்பூர், ஜூலை 05-**

திருப்பூர் மாவட்டம் அருகே புதுப்பெண் ரிதன்யா தற்கொலை வழக்கில் மாமியாரை போலீசார் கைது செய்தனர்.

திருப்பூர் மாவட்டம் அவினாசி கைகாட்டி புதூரை சேர்ந்தவர் அண்ணா துரை, தொழிலதிபர். இவருடைய மகள் ரிதன்யா (வயது 27). இவருக்கும், அதே பகுதியை சேர்ந்த ஈஸ்வரமூர்த்தியின் மகன் கவின்குமார் (27) ஆகியோருக்கும் கடந்த ஏப்ரல் மாதம் 11-ந் தேதி திருமணம் நடைபெற்றது. இந்தநிலையில் கடந்த 28-ந் தேதி காருக்குள் விஷம் குடித்து ரிதன்யா தற்கொலை செய்து கொண்டார். தற்கொலைக்கு முன்பு ரிதன்யா தனது தந்தைக்கு வாட்ஸ்-அப்பில் அழுதபடி தனது சாவுக்கு தனது கணவர், மாமனார், மாமியார் காரணம் என உருக்கமாக பேசிய ஆடியோ அனுப்பியது பரபரப்பை ஏற்படுத்தியது. இதைத்தொடர்ந்து சேவூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து கவின்குமார், ஈஸ்வரமூர்த்தியை கைது செய்தனர்.

இதையடுத்து மாமியார் சித்ராதேவி உடல் நலக்குறைவு காரணமாக பைண்டிங் ஆர்டர் முறையில் விடுவிக்கப்பட்டிருந்தார். கவின்குமார், ஈஸ்வரமூர்த்தி இருவரும் தங்களை ஜாமீனில் விடுவிக்க அனுமதிக்கு மாறு திருப்பூர் முதன்மை மாவட்ட கோர்ட்டில் மனு தாக்கல் செய்தனர். இந்த மனு மீதான விசாரணையை வரும் 7-ம் தேதிக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், புதுப்பெண் ரிதன்யா தற்கொலை வழக்கில் அவரது மாமியார் சித்ரா தேவியை தனிப்படை போலீசார் கைது செய்துள்ளனர். சேயூர் காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்ட அவர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளார். ரிதன்யாவின் பெற்றோர் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வந்ததைத் தொடர்ந்து மாமியார் சித்ரா தேவியை போலீசார் கைது செய்துள்ளனர்.

# ஈரானில் மீண்டும் விமான சேவைகள் தொடக்கம்

**தெஹ்ரான், ஜூலை 05-**

ஈரானில் விமான சேவை மீண்டும் தொடங்கியுள்ளது.

இஸ்ரேலுடனான போர் காரணமாக மூடப்பட்ட வான்வெளியை மீண்டும் திறந்துள்ளதாக ஈரான் அறிவித்துள்ளது. இஸ்ரேல் உடனான போர் காரணமாக கடந்த ஜூன் 13-ம் தேதி ஈரான் வான்வெளி மூடப்பட்டது. இதுகுறித்து ஈரானின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனம் ஐஆர்என்ஏ வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'தெஹ்ரானில் உள்ள மெஹ்ராபாத் மற்றும் இமாம் கொமேனி சர்வதேச விமான நிலையங்களும், ஈரான் நாட்டின் வடக்கு, கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கில் உள்ள அனைத்து விமான நிலையங்களும் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. மேலும், ஈரானில் முழுமையாக விமானங்கள் இயங்கத் தயாராக உள்ளன.'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைதொடர்ந்து, இஸ்பஹான் மற்றும் தப்ரிஸில் உள்ள விமான நிலையங்களைத் தவிர, நாடு முழுவதும் உள்ள அனைத்து விமான நிலையங்களிலிருந்தும் உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானங்கள் காலை 5 மணி முதல் மாலை 6 மணி வரை இயக்கப்படும் என்று ஈரான் விமானப் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

உள்கட்டமைப்பு பணிகள் முடிந்தவுடன் இஸ்ஃபஹான் மற்றும் தப்ரிஸில் இருந்து விமானங்கள் மீண்டும் இயங்கத் தொடங்கும் என்று ஐஆர்என்ஏ தெரிவித்தது. கடந்த மாதம் ஜூன் 13-ம் தேதி இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை தொடங்கிய பின்னர் ஈரான் தனது வான்வெளியை முழுவதுமாக மூடியது. இதன் பின்னர் கடந்த ஜூன் 24-ல் இரு நாடுகளுக்கும் இடையே போர்நிறுத்தம் அமலுக்கு வந்தது.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

### நகர வளர்ச்சியை நோக்கமாக கொண்ட

# கோயம்புத்தூர் 2-வது முழுமைத் திட்டம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்



சென்னை, ஜூலை 05-

தமிழ்நாட்டின் நகர வளர்ச்சியை நோக்கமாக கொண்ட கோயம்புத்தூர் 2-வது முழுமைத் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.

தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று (4.7.2025) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் நகர் ஊரமைப்பு இயக்ககத்தால் தயாரிக்கப்பட்ட 1531.57 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட கோயம்புத்தூர் உள்ளூர் திட்டப் பகுதியின் இரண்டாவது முழுமைத் திட்டத்தை வெளியிட்டார்.

1,287 சதுர கி.மீ. பரப்பளவுள்ள கோயம்புத்தூர் உள்ளூர் திட்டப் பகுதிக்கான முதல் முழுமைத் திட்டத்துக்கு 12.10.1994 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டது. பின்னர், இரண்டாவது முழுமைத் திட்ட வரைவு தயாரிக்கப்பட்டு 13.01.2024 அன்று அரசின் அனுமதி வழங்கப்பட்டது. அனுமதி பெறப்பட்ட வரைவு முழுமைத் திட்டம் இணையதளத்தில் வெளியிடப்பட்டு, பொது மக்களிடமிருந்து கருத்துகள் மற்றும் பரிந்துரைகள் பெறப்பட்டன.

தற்போது, மாநகராட்சி, நான்கு நகராட்சிகள் (மதுக்கரை, கருமத்தம்பட்டி, கூடலூர் மற்றும் காரமடை), 21 நகரப் பஞ்சாயத்துகள் மற்றும் 66 வருவாய் கிராமங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய 1,531.57 சதுர கிமீ பரப்பளவைக் கொண்ட, கோயம்புத்தூர் உள்ளூர் திட்டப் பகுதிக்கு முதன்முறையாக புவியியல் தகவல் அமைப்பு அடிப்படையிலான கோயம்புத்தூர் இரண்டாவது முழுமைத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தரவுகளின் அடிப்படையில் இயங்கும், இடம்சார்ந்த துல்லியமான நகர திட்டமிடலை கொண்டு வடிவமைக்கப்பட்டு, மாநில அளவிலான 40-க்கும் மேற்பட்ட துறைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் பங்குதாரர் ஆலோசனைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டமானது, தமிழ்நாடு 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரக் கனவு, முழுமையான நகரப் போக்குவரத்து திட்டம் மற்றும் 2041-க்குள் 33 சதவிகித பசுமை பரப்பளவை அடைவது போன்ற அரசின் முக்கிய கொள்கைகளுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் இரண்டாவது முழுமைத் திட்டம்-2041, மண்டல இணைப்புகளை மேம்படுத்தல், சமூக மற்றும் பொருளாதார உத்திகள் வலுப்படுத்தல், உட்கட்டமைப்பு மற்றும் சமூக வசதிகள் மேம்படுத்தல், வீட்டு வசதிகளுக்கான தேவையை பூர்த்தி செய்தல், சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்களை பாதுகாத்தல் ஆகியவற்றை முக்கிய நோக்கங்களாக கொண்டுள்ளது. ஒருங்கிணைந்த மற்றும் பங்கேற்பு அடிப்படையிலான திட்டமிடல் முறையின் மூலம், பல துறைகளின் திட்டங்களை செயல்முறைப்படுத்த தெளிவான காலக்கெடு மற்றும் திட்ட செலவு மதிப்பீட்டுடன் பகுதி வாரியாக தொகுக்கப்பட்டுள்ளன. இது திட்டங்களை நேர்த்தியாகவும், காலக்கெடுவில் செயல்படுத்தவும் வழிவகுக்கும்.

இந்த கோயம்புத்தூர் முழுமைத் திட்டம்-2041, தமிழ்நாட்டின் நகர வளர்ச்சியை நோக்கமாக கொண்ட முக்கியமான அம்சமாகும். இம்முழுமைத்திட்டம், நிலைத்த அனைவரையும் உள்ளடக்கிய மீள்தன்மை கொண்ட நகரமாக கோயம்புத்தூர் உருவாக்குவதற்கான அடித்தளத்தை அமைக்கிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பா.ம.க. கொறடா பொறுப்பில் இருந்து என்னை நீக்க முடியாது: அருள் எம்.எல்.ஏ.

சென்னை, ஜூலை 05-

ஜி.கே.மணி அனுமதி இல்லாமல் பா.ம.க. கொறடா பொறுப்பில் இருந்து என்னை நீக்க முடியாது என்று அருள் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாசுக்கும், தலைவர் அன்புமணி ராமதாசுக்கும் இடையே நிலவி வரும் கருத்து மோதலில் அக்கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திண்டாடி வருகின்றனர். அன்புமணியின் ஆதரவாளர்களை நீக்கிவிட்டு, புதிய நிர்வாகிகளை ராமதாஸ் நியமனம் செய்துள்ளார். அதேநேரம் நீக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் பதவி நியமன கடிதங்களை வழங்கி அன்புமணி ஆதரவை பெருக்கி வருகிறார். இதனிடையே ராமதாசுக்கு பக்கபலமாக இருந்த எம்.எல்.ஏ. அருளை, அன்புமணி கட்சியில் இருந்து நீக்கி உத்தரவிட்டார்.

இந்த நிலையில், பா.ம.க. கொறடா பொறுப்பில் இருந்தும் எம்.எல்.ஏ அருளை மாற்ற வலியுறுத்தி அன்புமணி ராமதாஸ் ஆதரவு எம்.எல்.ஏக்கள் சட்டபேரவை செயலரிடம் மனு அளித்துள்ளனர். பா.ம.க. எம்.எல்.ஏக்கள் வெங்கடேசன், சதாசிவம், சிவகுமார் ஆகியோர் சட்டப்பேரவை செயலரிடம் மனு அளித்துள்ளனர். பா.ம.க. கொறடாவாக மயிலம் தொகுதி எம்.எல்.ஏ சிவக்குமாரை நியமிக்ககோரி மனு அளித்துள்ளனர்.

அதே நேரத்தில் ஜி.கே.மணி அனுமதி இல்லாமல் பா.ம.க. கொறடா பொறுப்பில் இருந்து என்னை நீக்க முடியாது என்று அருள் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார். மேலும் அருள் எம்.எல்.ஏ. சபாநாயகர் அப்பாவுவை சந்தித்து மனு அளிக்க உள்ளார். பா.ம.க. சட்டப்பேரவைக்குழுத் தலைவர் ஜிகே மணி, அருள் கொறடாவாக தொடருவார் என்று அளித்திருக்கக்கூடிய கடிதத்தை சபாநாயகரை சந்தித்து நேரில் வழங்க உள்ளார்.

# திருப்போரூரில் வருகிற 9-ம் தேதி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு



சென்னை, ஜூலை 05-

மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தர வலியுறுத்தி, திருப்போரூரில் வருகிற 9ம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த இருப்பதாக எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், அ.தி.மு.க. பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம், திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி வாழ் மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படாத காரணத்தால், அப்பகுதி மக்கள் மிகுந்த சிரமத்துடன் வாழ்ந்து வருவதாக, தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. தற்போதைய ஆட்சியில், படவட்டம்மன் கோயில் தெரு, எம்.ஜி.ஆர். நகர், குமரன் நகர், மேட்டுக்குப்பம் ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. திருப்போரூர் அரசு மருத்துவமனையில், மருத்துவ சிகிச்சைக்கு தேவைப்படும் எக்ஸ்ரே மெஷின், ஸ்கேன் வசதி, அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் போதிய மருத்துவர்கள் இல்லாத காரணத்தால் பொதுமக்கள் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு செல்ல வேண்டிய அவல நிலை உள்ளது. இந்நிலையில், தி.மு.க. அரசைக் கண்டித்தும், மக்களின் அடிப்படைத் தேவைகளை உடனடியாக நிறைவேற்றித் தர வலியுறுத்தியும், அ.தி.மு.க. செங்கல்பட்டு கிழக்கு மாவட்டத்தின் சார்பில், 9.7.2025 – புதன் கிழமை காலை 10 மணியளவில், திருப்போரூர் பேரூராட்சி மன்ற அலுவலகம் அருகில், முன்னாள் அமைச்சர் பா. வளர்மதி தலைமையிலும்; செங்கல்பட்டு கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருக்கழுக்குன்றம் ஆறுமுகம் முன்னிலையிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இமாச்சலில் மேகவெடிப்பு: 69 பேர் பலி; ரூ.700 கோடி சேதம்

சிம்லா, ஜூலை 05-

இமாச்சல பிரதேச மாநிலத்தில் பருவமழைக் காரணமாக ஏற்பட்ட மேகவெடிப்பு, மழை வெள்ளம், நிலச்சரிவு ஆகியவற்றால் 69 பேர் உயிரிழந்துள்ளனர்.

இமாச்சல பிரதேச மாநிலத்தில் பருவமழைக் காரணமாக ஏற்பட்ட மேகவெடிப்பு, மழை வெள்ளம், நிலச்சரிவு ஆகியவற்றால் 69 பேர் உயிரிழந்த நிலையில், 37 பேரை காணவில்லை. 110 பேர் காயம் அடைந்துள்ளனர். 700 கோடி ரூபாய் அளவிற்கு சேதம் ஏற்பட்டுள்ளது என அம்மாநில முதல்வர் சுக்விந்தர்சிங் சுகு தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே மழையால் தத்தளித்து வரும் நிலையில், வருகிற 7ஆம் தேதி வரை கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இமாச்சல பிரதேசத்தின் மண்டியில் உள்ள துனாக், பக்சயேத் ஆகிய பகுதிகளில் மிகப்பெரிய அளவில் சேதங்கள் சந்தித்துள்ளன.

பருவமழை தொடங்கியதில் இருந்து 14 மேகவெடிப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக சாலைகள், குடிநீர் திட்டங்கள், மின்சார வினியோகம் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. பேரிடரால் பாதிக்கப்பட்ட குடும்பத்துடன் அரசு நிற்பதாக சுகு உறுதி அளித்துள்ளார். மேலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தங்குமிடத்திற்கு வாடகையாக 5 ஆயிரம் வழங்கப்படும். தேடுதல் மற்றும் மீட்புப் பணி நடைபெற்று வருகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

# அஜித்குமார் பிரேத பரிசோதனை அறிக்கையில் அதிர்ச்சி தகவல்கள்

சிவகங்கை, ஜூலை 05-

திருப்புவனம் இளைஞர் அஜித்குமாரின் பிரேதபரிசோதனை அறிக்கையில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது

சிவகங்கை மாவட்டம் மடப்புரம் பத்திரகாளி அம்மன் கோவிலில் காவலாளியாக பணியாற்றி வந்தவர் அஜித்குமார் (வயது 27).இந்த நிலையில் நகைத்திருட்டு வழக்கு தொடர்பாக, அஜித்குமாரை விசாரணைக்கு அழைத்து சென்ற போலீசார், அவரை கடுமையாக தாக்கினர். இதில் மயங்கி விழுந்து அஜித்குமார் உயிரிழந்தார்.தமிழகத்தையே உலுக்கிய இந்த சம்பவத்துக்கு எதிர்க்கட்சியினர் கடும் கண்டனங்களை தெரிவித்தனர்.

இந்நிலையில் மடப்புரம் இளைஞர் அஜித்குமாரின் பிரேதபரிசோதனை அறிக்கையில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அஜித்குமார் உடலின் வெளிப்புறத்தில் சிராய்ப்பு காயங்கள் என 44 காயங்களும், ரத்த கட்டுக் காயங்களும் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மூளையில் ரத்தக் கசிவு ஏற்பட்டதும், சிகரெட்டால் சூடு வைத்ததும் அம்பலமாகி உள்ளது.

இதுதொடர்பாக வெளியான தகவல்படி:-

* சுமார் 50 வெளிப்புற காயங்கள்,
* இதில் 12 சிராய்ப்பு காயங்கள்
* மீதி அனைத்தும் ரத்த கட்டு எனும் கன்றிய காயங்கள்
* கன்றிய காயங்கள் ஒவ்வொன்றும் வெறும் ஒற்றை காயங்கள் அல்ல
* காயங்கள் பல்வேறு கோணங்களில் உள்ளன
* வயிற்றின் நடுவே கம்பை வைத்து குத்திய காயம் உள்ளது
* தலை கபாலத்தில் அடியும், உள்ளே மூளையில் ரத்த கசிவும் உள்ளது.
* சிகரெட் சூடு வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுள்ளது

இது மிக தீவிரமான சித்திரவதை முறைகளில் ஒன்று. இது முற்றிலும் மனித உரிமைகளை மீறும் செயல். சர்வதேச சட்டங்களுக்கு எதிரானது. இந்த சித்திரவதை திட்டமிட்டு, தொடர்ந்து, பல மணி நேரங்கள் நடந்து இருக்கக்கூடியது. உடல் முழுவதும் தாக்கங்கள் இருப்பதால், தனிநபரால் மட்டும் செய்யப்பட்டது எனச் சொல்ல முடியாது.இது தீவிர காவல் சித்திரவதை, மற்றும் சட்டவிரோத விசாரணை, அல்லது படுகொலை எனக் உறுதி படுத்தும் வகையில் உள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆபரேஷன் சிந்தூரின் போது 3 எதிரிகளை எதிர் கொண்டோம்

## ராணுவ துணை தலைமை தளபதி தகவல்

புதுடெல்லி, ஜூலை 05-

ஆபரேஷன் சிந்தூரின் போது ஒரு எல்லையில் பாகிஸ்தான், சீனா, துருக்கி என 3 எதிரிகளை எதிர்கொள்ள வேண்டி இருந்தது என்று ராணுவத் துணைத் தலைமை தளபதி ராகுல் ஆர். சிங் தெரிவித்துள்ளார்.

இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு ஏற்பாடு செய்த புதுயுக ராணுவ தொழில்நுட்பங்கள் நிகழ்ச்சியில் உரையாற்றிய ராகுல் ஆர் சிங், "இந்தியா ஒரு எல்லையில் (பாகிஸ்தான் எல்லை) இரண்டு எதிரிகளை (பாகிஸ்தான், சீனா) கொண்டுள்ளது. உண்மையில் மூன்று எதிரிகள் (பாகிஸ்தான், சீனா, துருக்கி). போரில் பாகிஸ்தான் முன்னணியில் இருந்தது. சாத்தியமான அனைத்து உதவிகளையும் சீனா வழங்கியது.

பாகிஸ்தான் கடற்படையில் 81% சீன வன்பொருட்களே (ஹார்டுவேர்) உள்ளன. முழு ராணுவ நடவடிக்கையின் போது வான் பாதுகாப்பு எவ்வாறு செயல்பட்டது என்பது முக்கியமானது. நமக்கு வலுவா

ன வான் பாதுகாப்பு அமைப்பு மிகவும் அவசியம்.

பாகிஸ்தானுக்கு அதிக ஆதரவை வழங்குவதில் துருக்கி முக்கியப் பங்கு வகித்தது. அவர்கள் பைரக்தார் உள்ளிட்ட ஏராளமான ட்ரோன்களை பாகிஸ்தானுக்கு வழங்கினர்.

பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத அமைப்புகளின் உள்கட்டமைப்புகள் மீது இந்திய ராணுவம் நடத்திய துல்லிய தாக்குதல் பாராட்டுக்குரியவை. இலக்குகள் மீது மட்டும் தாக்குதல் நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்ட சில மணி நேரங்களில் தாக்குதல் நடத்தப்பட்டது.

ராணுவம் தனது இலக்கை எய்தும்போது, அது தனது தாக்குதலை நிறுத்த முயற்சிக்க வேண்டும். ஏனெனில், போரை தொடங்குவது எளிது, அதை நிறுத்துவது மிகவும் கடினம். எனவே, சரியான நேரத்தில் போரை நிறுத்துவதற்கும் திட்டமிட்டு நடத்தப்பட்ட மிகவும் திறமையான தாக்குதல் இது என்று நான் கூறுவேன்'' என தெரிவித்துள்ளார்.

# 7-வது முறையாக ஸ்டாலினை முதல்வராக அரியணையில் அமர்த்த உறுதியேற்போம்

## துணை முதல்வர் உதயநிதி அறிக்கை

சென்னை, ஜூலை 05-

7-வது முறையாக முதலமைச்சராக ஸ்டாலினை அரியணையில் அமர்த்த உறுதியேற்போம் என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. இளைஞர் அணியின் செயலாளராக பொறுப்பேற்று 7 ஆண்டில் அடியெடுத்து வைக்கும் துணை முதல்வர் உதயநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

ஸ்டாலினை முதல்வராக்க தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலினால் உருவாக்கப்பட்ட இளைஞரணியின் செயலாளராக 7-ம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதில் மகிழ்ச்சி கொள்கிறோம்.

திராவிடக் கருத்தியலை மனதில் ஏந்தி தமிழ்ச்சமுதாயத்தின்முன்னேற்றத்திற்காகவும் – தி.மு.க.வை வலுப்படுத்திடும் வகையிலும் முதல்வர் ஸ்டாலினின் சொல்லை செயலாக்குகிற பொறுப்பை உணர்ந்தே ஒவ்வொருபணியையும் இளைஞர் அணி சார்பில் மேற்கொண்டு வருகிறோம்.கடந்த 6 ஆண்டுகளில் நீர்நிலைகளை தூர் வாரியது முதல் கொரோனாகாலத்தில் ஆற்றிய சேவைகள் என தொடரும் மக்கள் பணிகள் ஒரு பக்கம் - தேர்தல்பரப்புரைகள், பாசிச சக்திகளுக்கு எதிரான போராட்டக் களங்கள் எனஅடுக்கடுக்கான கழகப் பணிகள் மறுபக்கம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அடித்தளத்தில் இருந்து வலிமையானகட்டமைப்போடு இளைஞர் அணி இன்று மிக நேர்த்தியாக உருவெடுத்துள்ளது. இன்றைக்கு 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொறுப்பாளர்களோடு தி.மு.க. வின் ராணுவமாய்த் திகழ்கிறது நம் இளைஞர் அணி. ஏதோ உட்கார்ந்த இடத்தில்இருந்து நிரப்பப்பட்ட பொறுப்புகள் அல்ல! இந்தப் பொறுப்பாளர்களை நியமிக்கஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களை நாமே நேர்காணல்செய்திருக்கிறோம். களத்தில் மட்டுமின்றி இணையத்திலும் கழகப்பணி ஆற்றிட சமூகவலைதளத்துக்கென கழக மாவட்டத்துக்கு ஒரு துணை அமைப்பாளரைநேர்காணல் மூலம் நியமித்து வருகிறோம்.நமது திமுக, தலைவர் ஸ்டாலினின் கட்டளையை ஏற்று, 17,000 பேர் பங்கேற்ற என் உயிரினும் மேலான'' பேச்சுப் போட்டியை நடத்தி - கழகத்துக்கு 242 இளம்பேச்சாளர்களை கண்டறிந்து தந்திருக்கிறது இளைஞர் அணி.

மத்திய அரசு இழைக்கும் அநீதிகளுக்கு எதிராக தமிழ்நாட்டுக்குடும்பங்களை அணிசேர்க்கும் ஓரணியில் தமிழ்நாடுமுன்னெடுப்பை வெற்றியடையச் செய்ய அயராது களப்பணி ஆற்றும் இளைஞர் அணித் தோழர்கள்தான் என்னை ஊக்குவிக்கும் உற்சாகம். இந்த நேரத்தில் என் தோளோடு தோள் நிற்கும் இளைஞர் அணி நிர்வாகிகள்தம்பிமார்கள் அத்தனைப் பேருக்கும் என் நன்றிகள். இளைஞர் அணிச் செயலாளராக 7-ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்நாளில், நம் கழகத்தை 7-வது முறை அரியணை ஏற்ற உறுதியேற்போம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்

# வரும் 2026 சட்டப்பேரவை தேர்தல் த.வெ.க. முதல்வர் வேட்பாளர் விஜய்

## பனையூர் கூட்டத்தில் 20 தீர்மானங்கள்

சென்னை, ஜூலை 05-

2026 சட்டசபை தேர்தலில் முதல்வர் வேட்பாளர் விஜய். த.வெ.க. தலைமையில் தான் கூட்டணி அமைக்கப்படும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழக வெற்றிக்கழகத்தின் செயற்குழு கூட்டம் கட்சியின் தலைவர் விஜய் தலைமையில் பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் பங்கேற்க செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட செயலாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் என 1,200 பேர் பங்கேற்றனர்.

மேலும் 120 மாவட்டங்கள், 12,500 கிராமப் புறங்களில் த.வெ.க.வின் கொள்கை விளக்கக் கூட்டங்களை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், விஜய்யின் தேர்தல் சுற்றுப் பயணத்திற்கு முன் மாநில மாநாட்டை நடத்த த.வெ.க. செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. பரந்தூர் மக்கள் உள்பட விவசாயிகளின் நலன் மற்றும் உரிமைக்காகத் தமிழக வெற்றிக் கழகம் என்றும் துணை நிற்கும்.

2. கொள்கை எதிரிகளுடனோ, பிளவுவாத சக்திகளுடனோ என்றும் நேரடியாகவோ மறைமுகமாகவோ கூட்டணி இல்லை.

3. விவசாயிகளின் போராட்டத்திற்கு எதிரான அரசின் அதிகார மீறலைக் கண்டிக்கிறோம்!

zமேல்மா சிப்காட் விரிவாக்கத் திட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும்.

4. நெல் மற்றும் கரும்பு விவசாயிகளுக்கான நிலுவைத் தொகையை உடனே வழங்க வேண்டும்.

5. பெரும் நட்டத்தை சந்தித்துள்ள மா விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க உரிய நடவடிக்கை தேவை.

6. மலைக்கோட்டை மாநகரில் நடக்கும் மணல் கொள்ளை தடுக்கப்பட வேண்டும்.

7. என்எல்சி-க்கு நிலம் கொடுத்தவர்களுக்கு முழுமையான இழப்பீட்டுத் தொகை, குடும்பத்தினருக்கு வேலை வாய்ப்பு மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக்க வலியுறுத்தி தீர்மானம்.

8. விசைத்தறி தொழிலாளர்கள் கோரிக்கைகளை முத்தரப்பு பேச்சுவார்த்தை மூலம் நிறைவேற்றக்கோரி தீர்மானம்.

9. திண்டுக்கல் மாவட்டத்தில் வாசனைத் திரவிய ஆலை தொடங்கக் கோரும் தீர்மானம்.

10. தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கனிமவளக் கொள்ளையை தடுத்து நிறுத்த வேண்டும்.

11.ஜாக்டோ ஜியோ போராட்டத்துக்கு ஆதரவு.

12. அரசு மருத்துவர்களை நம்ப வைத்து ஏமாற்றாமல், கொடுத்த வாக்குறுதியின்படி அவர்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

13. தமிழக மீனவர்கள் பிரச்சனைக்கு நிந்தரத் தீர்வு காண கச்சத்தீவை குத்தகை அடிப்படையில் ஒன்றிய அரசு கேட்டுப் பெற வேண்டும்.

14. இருமொழிக் கொள்கை தீர்மானம்.

15. தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தம் (SIR) நடத்துவதன் வாயிலாக சிறுபான்மையினர் வாக்குகளை குறைக்க முயற்சிப்பதை தடுத்து நிறுத்த வேண்டும்.

16. கீழடியில் தமிழர் நாகரிகத்தை மூடி மறைக்கும் மத்திய பா.ஜ.க. அரசுக்குக் கண்டனம்.

17. த.வெ.க.விற்கு எதிரான கபட நாடக தி.மு.க. அரசின் அராஜகப் போக்கிற்குக் கண்டனம்.

18. தொகுதி மறுசீராய்வு - ஒரே நாடு ஒரே தேர்தல் முறைக்குக் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம்.

19. காவல் துறை விசாரணையின் போது தொடர்ந்து பலர் கொல்லப்படுவதற்கும் அதனைத் தடுக்கத்தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாத உள்துறை அமைச்சருக்கும் கண்டனம்.

20. பெரியார், அண்ணாவை அவமதிக்கும் பா.ஜ.க.வின் பிளவுவாத அரசியலைக் கண்டிக்கும் தீர்மானம்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தி.மு.க., பா.ஜ.க.வுடன் என்றைக்கும் த.வெ.க. கூட்டணி இல்லை: விஜய்

சென்னை, ஜூலை 05-

தி.மு.க., பா.ஜ.க.வுடன், என்றைக்கும் நேரடியாகவோ, மறைமுகவோ கூட்டணி இல்லை, என்பதில் த.வெ.க. மிக உறுதியாக இருக்கிறது என்று அக்கட்சியின் தலைவர் விஜய் கூறியுள்ளார்.

சென்னையை அடுத்த பனையூரில் த.வெ.க. செயற்குழுக் கூட்டம், அக்கட்சியின் தலைவர் விஜய் தலைமையில் நேற்று (ஜூலை 4) நடைபெற்றது. இக்கூட்டத்தில், 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் முதல்வர் வேட்பாளராக விஜய் தான் இருப்பார் என்று முடிவு செய்யப்பட்டது. கூட்டணி குறித்த முடிவெடுக்கும் அதிகாரத்தை விஜய்க்கு வழங்குவது என்றும் முடிவு எட்டப்பட்டது. மேலும், த.வெ.க.வின் மாநில மாநாட்டை ஆகஸ்ட் மாதத்தில் நடத்துவது, பேரவைத் தேர்தலையொட்டி விஜய் செப்டம்பர் முதல் டிசம்பர் வரை தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்வார் என்று முடிவு செய்யப்பட்டது.

இதுதவிர, பரந்தூர் விமான நிலைய எதிர்ப்புப் போராட்டத்துக்கு த.வெ.க. துணை நிற்கும், ஜாக்டோ - ஜியோ போராட்டத்துக்கு ஆதரவு அளிக்கப்படும் உள்பட 20 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதனைத் தொடர்ந்து பேசிய த.வெ.க. தலைவர் விஜய், "கொள்கை எதிரிகள் மற்றும் பிளவுவாத சக்திகளுடன், என்றைக்கும் நேரடியாகவோ, மறைமுகவோ கூட்டணி இல்லை, என்பதில் த.வெ.க. மிக உறுதியாக இருக்கிறது. கூட்டணி என்றாலும் த.வெ.க. தலைமையில் அமையும் கூட்டணி எப்போதும் தி.மு.க. மற்றும் பா.ஜ.க.வுக்கு எதிரானதாகத் தான் இருக்கும். அதில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இது இறுதியான தீர்மானம் மட்டுமல்ல. உறுதியான தீர்மானம்.'' என்று விஜய் பேசினார்.

# சொகுசு கப்பலுக்கு எதிர்ப்பு தெரிவித்து புதுச்சேரி அ.தி.மு.க. மறியல் போராட்டம்

புதுச்சேரி, ஜூலை 05-

சுற்றுலா சொகுசு கப்பல் வருகையை எதிர்த்து அ.தி.மு.க. மறியல் போராட்டம் நடத்தியது.

புதுச்சேரியில் கடந்த தி.மு.க. - காங்கிரஸ் ஆட்சியின் போது இந்த சுற்றுலா சொகுசு கப்பல் திட்டம் அறிவிக்கப்பட்டது. அப்போது என்.ஆர்.காங்கிரஸ், அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் கடுமையாக எதிர்த்தன. சொகுசு கப்பலில் சூதாட்டம் நடைபெறும் என்பதால் நம் மாநில கலாச்சாரம் சீரழியும் என கடுமையாக எதிர்த்தன. இதனால் இந்த திட்டம் கைவிடப்பட்டது.

இப்போது மீண்டும் இந்த சொகுசு கப்பல் பயணம் நேற்று முதல் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டது. அதன்படி புதுச்சேரி உப்பளம் துறைமுகம் அருகே கப்பல் வந்தது. புதுச்சேரியை சுற்றி பார்க்க வந்த பயணிகளை வரவேற்ற சுற்றுலாத் துறை செயலர் மணிகண்டன் கூறுகையில், தவறான விஷயங்களை அரசு அனுமதிக்காது என்றார்.

இந்நிலையில் இக்கப்பல் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து அ.தி.மு.க. மாநில செயலர் அன்பழகன் தலைமையில் போராட்டம் நடந்தது. அதைத்தொடர்ந்து மறியலிலும் ஈடுபட்டனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்பகுதியில் சில நிபந்தனைகளுடன் மீன்பிடிக்கிற உரிமையை பெற்றுத் தர பிரதமர் மோடி, இலங்கை அரசுடன் உடனடியாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். இந்த பிரச்சினையை மனிதாபிமான உணர்வுடன் இலங்கை அரசு அணுகாத நிலையில் இதில கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

- செல்வப்பெருந்தகை



பகுதி நேர ஆசிரியர்களின் பணி நிலைப்பு கோரிக்கையை தமிழக அரசு ஏற்க வேண்டும். 12 ஆயிரத்திற்கும் கூடுதலான குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும், சமூகப் பாதுகாப்பையும் அது உறுதி செய்யும். அதற்காக இதை செய்வதில் எந்தத் தவறும் இல்லை. அதன் மூலம் அவர்கள் வரும் 8-ம் தேதி நடத்தவிருக்கும் போராட்டத்தை தவிர்க்கச் செய்ய வேண்டும்.

- அன்புமணி



பா.ம.க.வில் ஏற்பட்டுள்ள பிளவுக்கு நாங்கள் காரணம் அல்ல. கூட்டணி தொடர்பாக விரைவில் பா.ம.க.வில் இருந்து நல்ல செய்தி வரும். எங்கள் கூட்டணியில் விஜய் சேருவாரா? என்பதை பொறுத்திருந்து பாருங்கள். தேர்தலுக்கு இன்னும் நிறைய நாட்கள் உள்ளது. நல்லதே நடக்கும்.

- நயினார் நாகேந்திரன்



அஜித்குமாரை தாக்கிய அனைவருக்குமே கவுன்சிலிங் கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறேன். தமிழக அரசு இதை தீவிரமாக சிந்திக்க வேண்டும். எல்லோரும் ஒரு அழுத்தத்தில் பணியாற்றி வருகிறார்கள். த.வெ.க. தலைவர் சென்று பார்த்ததை ஒரு ஸ்டண்ட் என்று சொல்லும் அளவிற்கு கீழ்த்தரமாக போய்க் கொண்டு இருக்கிறார்கள்.

- தமிழிசை



ஈரோடு ஆறாவது வார்டு ஞானபுரம் பகுதியில் நகர்ப்புற நல்வாழ்வு மையத்தினை ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் திறந்து வைத்து பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கினார். இதில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், திமுக மாநகர செயலாளர் மு.சுப்பிரமணியம், மண்டல தலைவர் பி.கே.பழனிச்சாமி,மருத்துவர் கார்த்தீபன் வார்டு கவுன்சிலர் தமிழ் பிரியன் கலந்து கொண்டனர்.

# குன்னூர் நகராட்சிக்கு உட்பட்ட மாடல் ஹவுஸ் பகுதியில் நகர்ப்புற நல வாழ்வு மையம்: அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் குத்துவிளக்கு ஏற்றினார்



**ஊட்டி, ஜூலை.05-**

தமிழ்நாடு முதலமைச்சர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், சென்னை அடையாறு சாஸ்திரி நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் (03.07.2025) தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ரூ.52 கோடி மதிப்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 208 நகர்ப்புற நல்வாழ்வு மையங்கள், ரூ.60 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 50 ஆரம்ப சுகாதார நிலையங்களை காணொளி மூலமாக திறந்து வைத்தார். அதனை தொடர்;ந்து, நீலகிரி மாவட்டம் குன்னூர் நகராட்சிக்கு உட்பட்ட மாடல் ஹவுஸ் பகுதி நகர்ப்புற நல வாழ்வு மையத்தை அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் பார்வையிட்டு குத்துவிளக்கு ஏற்றினார்.பின்னர் அரசு தலைமை கொறடா தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிக் கிடைத்திட புதிய அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களை கட்டுதல், மருத்துவ கருவிகளை நிறுவுதல், அனைவருக்கும் நலவாழ்வு என்கிற உயரிய நோக்கினை செயல்படுத்தும் வகையில் மக்களை தேடி மருத்துவம் சாலை விபத்துகளில் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் 'இன்னுயிர் காப்போம்- நம்மைக் காக்கும் -48' போன்ற பல்வேறு திட்டங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை வாயிலாக செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், தமிழ்நாடு மக்களின் சுகாதார தேவைகளை மென்மேலும் மேம்படுத்தும் வகையில் தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருப்பதை போல நகர்புறங்களிலும் ஒருங்கிணைந்த தரமான மருத்துவ சேவையை வழங்கிட வேண்டும் என்ற நோக்கத்தில் இன்றைய தினம் தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ரூ.52 கோடி மதிப்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 208 நகர்ப்புற நல்வாழ்வு மையங்கள், ரூ.60 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 50 ஆரம்ப சுகாதார நிலையங்களை காணொளி மூலமாக திறந்து வைத்தார். அதில் நீலகிரி மாவட்டத்தில் கடநாடு ஆரம்ப சுகாதார நிலையம் ரூ.120 இலட்சம் மதிப்பிலும், உமரிகாட்டேஜ் ஆரம்ப சுகாதார நிலையம்; ரூ.158 இலட்சம் மதிப்பிலும், மாடல் ஹவுஸ் நகர்புற நல வாழ்வு மையம் ரூ.25 இலட்சத்திலும், மாக்கமூலா நகர்புற நலவாழ்வு மையம் ரூ.25 இலட்சத்திலும் என ஆக மொத்தம் ரூ.3 கோடியே 28 இலட்சம் மதிப்பில் திறந்து வைக்கப்பட்டது.

கடநாடு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் உமரிகாட்டேஜ் நகர்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ அலுவலர்கள், செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள், பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்கள் முதலானோர் பணியமர்த்தப்பட்டு மருத்துவ சேவைகள் வழங்கப்படவுள்ளது. இங்கு உள்நோயாளிகள், வெளி நோயாளிகளுக்கான பிரிவுகளும், மருந்தகம், ஆய்வகம், குழந்தைகள் பிறந்ததிலிருந்து 16 வயது முடிய அனைத்து தடுப்பூசிகளும், கர்ப்ப கால பரிசோதனை, பிரசவித்த தாய்மார்களுக்கான கவனிப்பு, காய்ச்சல், சுவாச நோய்த்தொற்றுகள், வயிற்றுப்போக்கு, தோல்நோய்த் தொற்றுகள், ஒவ்வாமை, உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, மூட்டு மற்றும் தசை எலும்பு பிரச்சனைகள்,கண் மற்றும் காதுநோய்த் தொற்றுகள், சிறுநீர்பாதை தொற்று, இரத்தசோகை, பாம்புக்கடி மற்றும் நாய்க்கடிக்கான சிகிச்சை, ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் தாய்ஃகுழந்தை மருத்துவ பிரச்சனைகள் ஆகியவைகள் அனைத்திற்கும் சிகிச்சைஅளிக்கப்படும். நகர்புற சுகாதார மற்றும் நலவாழ்வு மையங்களில் மருத்துவ அலுவலர், செவிலியர்,சுகாதார ஆய்வாளர், பல்நோக்கு மருத்துவ மனை பணியாளர் முதலானோர் பணியமர்த்தப்பட்டு காலை 8.00 மணிமுதல் 12 மணி வரையிலும் மாலை 4.00 மணி முதல் 8.00 மணி வரையிலும் மருத்துவ சேவைகள் வழங்கப்படவுள்ளது. மேலும் மருத்துவசேவைகள் நகர் புறநல வாழ்வு மையங்கள் வாயிலாக கர்ப்ப கால மற்றும் பிரசவகால சேவைகள், சிசு மற்றும் குழந்தைகள் நலசேவைகள், குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கான சேவைகள்,குடும்பநலம், கருத்தடை மற்றும் பேறுகால சேவைகள்,தொற்றா நோய்களுக்கான சிகிச்சைகள,வெளிநோயாளிகள் மற்றும் சிறுநோய்களுக்கு சிகிச்சைகள், தொற்றா நோய்களுக்கான சிகிச்சை அளித்தல் (மக்களைத் தேடி மருத்துவம்), மனநோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளித்தல்,கண்,காது, மூக்கு மற்றும் தொண்டை பிரச்சனைக்கு சிகிச்சை அளித்தல், பல் நோய்களுக்கான சிகிச்சைஅளித்தல், முதியோர் மற்றும் இறக்கும் தருவாயில் உள்ளவர்களுக்கு சிகிச்சை அளித்தல், விபத்து மற்றும் அவசர மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்காக செயல்பட்டு வருகிறது என தெரிவித்தார்.நிகழ்ச்சியில், குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா, துணை இயக்குநர் சுகாதார (பணிகள்) மரு.சோமசுந்தரம், குன்னூர் நகராட்சி ஆணையாளர் இளம்பருதி, வட்டார மருத்துவ அலுவலர் பாரதி, குன்னூர் வட்டாட்சியர் ஜவஹர், குன்னூர் நகரமன்றத் தலைவர் சுசிலா, நகரமன்றத் துணைத் தலைவர் வாஷிம் ராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மசினகுடி ஊராட்சி பகுதியில் ரூ.1.16 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் முடிவுற்ற வளர்ச்சித்திட்டப்பணிகள்

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் ஆய்வு

**ஊட்டி, ஜூலை.05-**

நீலகிரி மாவட்டம், கூடலூர் ஊராட்சி ஒன்றியம், மசினகுடி ஊராட்சி பகுதியில்; ரூ.1.16 கோடி மதிப்பில்; நடைபெற்று வரும், முடிவுற்ற வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



நீலகிரி மாவட்டம் கூடலூர் ஊராட்சி ஒன்றியம், மசினக்குடி ஊராட்சியில் செம்மநத்தம் கிராமத்தில் மாயாற்றில் இருந்து செம்மநத்தம் கிராம விவசாய நிலங்களுக்கு கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023-2024 நிதியிலிருந்து ரூ.25 இலட்சம் மதிப்பில் நடைபெற்று முடிவுற்ற பணியினையும், பிரதான் மந்திரி ஜன்மன் திட்டத்தின் கீழ் தலா ரூ.5.73 வீதம் ரூ.22.92 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் வீடுகளையும், சூரிய ஒளி ஆற்றலில் இயங்கும் நீர்; உந்து நிலையம் அமைத்தல் பணியினையும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில், செம்மநத்தம் கிராமத்தில் கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023-2024 நிதியிலிருந்து செம்மநத்தம் கிராமத்தில் நடைபெற்று முடிந்த நீர்; தேக்க தொட்டியினையும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.18.67 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள நியாய விலை கடையினையும், கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் பிரதம மந்திரி வீடு 4வது தெருவிலிருந்து ராகினி வீடு முதல் நாகம்மா வீடு வரை ரூ.6.20 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் கான்கிரீட் சாலை பணியினையும், நாகம்மா வீடு முதல் ஷபீராபானு வீடு வரை ரூ.5.56 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் சாலை பணியினையும், மசினகுடியில் அமைக்கப்பட்டுள்ள இ பாஸ் சோதனை சாவடியில் வழியாக வெளி மாநிலங்களிலிருந்து, நீலகிரி மாவட்டத்திற்கு வரும் வாகனங்கள் இ பாஸ் பெற்று வருவதையும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.18 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் அங்கன்வாடி மையத்தினையும், பொது நிதி 2024-2025 திட்டத்தின் கீழ் ரூ.3.50 இலட்சம் மதிப்பில் போடப்பட்டுள்ள மின் வேலியினையும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.6.50 அமைக்கப்பட்டுள்ள வட்டார நாற்றங்கால் பண்ணை மண்புழு இயற்கை உரம் கிடங்கினையும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில், மாநில நிதிக் குழு மானியம் 2023-2024 மாவட்ட ஊராட்சி பொது நிதியின் கீழ் ரூ.10 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட கழிவுநீர் கால்வாய் பணியினையும் என மொத்தம் ரூ.1.16 கோடி மதிப்பில் நடைபெற்று வரும், முடிக்கப்பட்ட பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனை தொடர்ந்து, பொக்காபுரம் அரசு உண்டு உறைவிடப்பள்ளியில் சமையலறை, உணவு பொருட்களின் இருப்பு, அடிப்படை வசதிகள் குறித்தும், மாயார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாணாக்கர்களுடன் கற்றல் திறன் குறித்து கேட்டறிந்து கலந்துரையாடி, சமையற் கூடம் மற்றும் உணவு பொருட்களின் இருப்பு குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முன்னதாக, செம்மநத்தம் கிராமத்தில் 2025-2026 பிரதான் மந்திரி ஜென்மம் நிலம் திட்டத்தின் கீழ் தலா ரூ.5.73 இலட்சம் வீதம்; 5 பயனாளிகளுக்கு ரூ.28.65 இலட்சம் மதிப்பில் வீடு கட்டுவதற்கான ஆணையினை வழங்கினார். பின்னர் இக்கிராம மக்களின் கோரிக்கைகளான நிழற்குடை மற்றும் நடமாடும் நியாய விலைக்கடை அமைத்தல் ஆகியவற்றினை ஏற்று, நாடாளுமன்ற உறுப்பினர் பொது நிதியிலிருந்து நிழற்குடை அமைத்து தரவும், ஞாயிற்றுக்கிழமை மற்றும் மற்றொரு நாளில் நடமாடும் நியாயவிலை கடை மூலம் பொதுமக்களுக்கு உணவுப் பொருட்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது ஊட்டி வருவாய் கோட்டாட்சியர் சதீஷ்குமார், வட்டாட்சியர் சங்கர்கணேஷ், கூடலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சலீம், சுப்ரமணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம் செம்மநத்தம் கிராமத்தில் பிரதான் மந்திரி ஜென்மம் நிலம் திட்டத்தின்கீழ் தலாரூ.5.73லட்சம்வீதம்5பயனபளிகளுக்குரூ.28.65லட்சம்மதிப்பில்வீடுகட்டுவதற்கான ஆணையினை மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வழங்கினார். உடன் வருவாய் கோட்டாட்சியர் சதீஷ்குமார், வட்டாட்சியர் சங்கர் கணேஷ், கூடலூர் வட்டார வளர்ச்சி அலவலர்கள் சலீம், சுப்ரமணி உட்பட பலர் உள்ளனர்.

# ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா குடியிருப்பு பகுதியில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தம்: வனத்துறையினர் நடவடிக்கை

**ஊட்டி, ஜூலை.5-**



நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள் 65 சதவீதம் வனப்பகுதியை கொண்டு உள்ளது. சமீப நாட்களாக வனப்பகுதியில் இருந்து வெளியேறும் சிறுத்தை, கரடி, காட்டெருமை, புலி, யானை உள்ளிட்ட வன விலங்குகள் குடியிருப்பு பகுதிகளில் அதிகமாக உலா வருகிறது. குறிப்பாக மஞ்சூர் பகுதியில் கரடி மற்றும் காட்டெருமைகளும், கூடலூர் பகுதியில் காட்டுயானைகளும், ஊட்டியில் புலி மற்றும் சிறுத்தை நடமாட்டமும் அதிகரித்துள்ளது. இவ்வாறு வனப்பகுதியை விட்டு வெளியே வரும் விலங்குகளால் மனித வனவிலங்கு மோதல் ஏற்படுகிறது. கடந்த மாதம் அரசு தாவரவியல் பூங்கா பகுதியில் சிறுத்தை ஒன்று புகுந்து வளர்ப்பு நாயை வேட்டையாடி சென்றது.

இந்த நிலையில் மீண்டும் கடந்த வாரம் ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா பகுதியில் இரவு நேரத்தில் புகுந்த சிறுத்தை ஒன்று , நகர்வலம் போல் குடியிருப்பு பகுதிகளை சுற்றி வருகிறது. இதைத்தொடர்ந்து அந்தப் பகுதியில் இருந்த ஒரு வீட்டுக்குள் புகுந்து (வளர்ப்பு நாய்)இிறை ஏதாவது உள்ளதா என தேடி பார்த்தது. அங்கு எதுவும் சிக்காததால் உடனடியாக வேறு பகுதிக்கு சென்று விட்டது.

இந்த காட்சிகள் அங்கு பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவாகி இருந்தது. இந்த வீடியோ காட்சிகள் தற்போது சமூக வலைதளத்தில் வைரலாக பரவி வருகிறது.

இதனால் மேலும் பீதி அடைந்துள்ள அந்த பகுதி மக்கள், குடியிருப்பு பகுதிக்குள் நடமாடி வரும் சிறுத்தையை கண்காணித்து கூண்டு வைத்து பிடித்து அடர்ந்த வனப்பகுதிக்குள் விட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இந்தநிலையில் மாலை மற்றும் இரவு நேரங்களில் அப்பகுதி மக்கள் வீடுகளை விட்டு வெளியே வர அச்சம் அடைந்தனர். மேலும் வீட்டில் வளர்க்கப்படும் நாய் பூனை உள்ளிட்ட பிராணிகளை கூண்டுகளில் அடைத்து வைத்து பாதுகாத்து வருகின்றனர்.

இந்த நிலையில் மீண்டும் குடியிருப்பு பகுதியில் உள்ள புதர்களின் சிறுத்தை ஓய்வெடுத்ததை கண்ட பொதுமக்கள் உடனடியாக வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

இதன் காரணமாக அப்பகுதிக்கு வந்த வனத்துறையினர் குடியிருப்பில் ஒட்டி இருந்த புதர்களை வெட்டி அகற்றி பின்பு தானியங்கி கேமராக்களை பொருத்தியுள்ளனர்.

இரவு நேரங்களில் இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் தேவையின்றி வெளியே வர வேண்டாம் எனவும் சிறுத்தை மீண்டும் நடமாடுவதை கண்டால் உடனடியாக வனத்துறையினருக்கு தகவல் தெரிவிக்க அறிவுறுத்திப்பட்டு உள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில்

# ஊட்டச்சத்து வேளாண்மை இயக்க திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு பயறு வகைகள், காய்கறிகள் மற்றும் பழச்செடிகள் தொகுப்பு

## கலெக்டர் ச.கந்தசாமி வழங்கினார்

**ஈரோடு,ஜூலை.05-**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (4.7.2025) சென்னையில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் 'ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் 2025-26' திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு 100 சதவிகிதம் அரசு மானியத்தில் பயறு வகைகள் அடங்கிய விதைத் தொகுப்பு, காய்கறிகள் விதைத்தொகுப்பு மற்றும் பழச்செடிகள் தொகுப்புகளை வழங்கி திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, கலெக்டர் ச.கந்தசாமி, ஈரோடு மாவட்டம், கவுந்தப்பாடி, வாய்க்கால் மேடு, பாசன சபா கூடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இன்று (4.7.2025) வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் 'ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் 2025-26' திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 31 பயனாளிகளுக்கு 100 சதவிகிதம் அரசு மானியத்தில் பயறு வகைகள் அடங்கிய விதைத் தொகுப்பு, காய்கறிகள் விதைத்தொகுப்பு மற்றும் பழச்செடிகள் தொகுப்புகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மக்கள் நலமும், நல்வாழ்வும் உண்ணும் உணவைப் பொறுத்தே அமைகிறது. உடல்நலம் பேண, ஊட்டச்சத்து மிக்க உணவினை உரிய அளவில் உட்கொள்வது இன்றியமையாதாகும். ஊட்டச்சத்துகளை அளிப்பதில் காய்கறிகள், பழங்கள் பயறுவகைகள், சிறுதானியங்கள் பெரும்பங்காற்றுகின்றன. ஊட்டச்சத்து வழங்கும் இந்த விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரித்து ஊட்டசத்துப் பாதுகாப்பினை உறுதி செய்வதுடன், உழவர்களின் வருமானத்தை உயர்த்தும் வகையில் 'ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்' என்னும் புதிய திட்டம் தமிழ்நாட்டில் 2025-26ம் ஆண்டில் 125 கோடி ரூபாய் ஒன்றிய மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும் என அறிவித்தார்கள். ஒரு நபருக்கு காய்கறிகள், பழங்களின் தினசரி தேவை சராசரியாக 400 கிராம் ஆகும். ஊட்டச்சத்து மிக்க நஞ்சற்ற காய்கறிகள் கிடைப்பதை உறுதி செய்திடவும், மக்களின் அன்றாட காய்கறித் தேவைகளை நிறைவு செய்யவும், வீட்டுத் தோட்டங்களில் காய்கறிகள் வளர்ப்பதை ஊக்குவிக்கும் விதமாக தக்காளி, கத்தரி, வெண்டை, மிளகாய், கொத்தவரை, கீரை வகைகள் போன்ற ஆறு வகையான காய்கறி விதைகள் அடங்கிய தொகுப்பு 15 இலட்சம் குடும்பங்களுக்கு 100 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது.

மேலும், நகர்ப்புரங்களிலும் கிராமப்புரங்களிலும் வசிக்கும் மக்களின் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக விரைவில் பலனளிக்கும் பப்பாளி, கொய்யா, எலுமிச்சை ஆகிய மூன்று வகையான பழச்செடிகள் அடங்கிய பழச்செடித் தொகுப்புகள் ஒன்பது இலட்சம் குடும்பங்களுக்கு 100 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது.

பயறுவகைகள் விதைத் தொகுப்பு புரதச்சத்து நிறைந்த மரத்துவரை,காராமணி உள்ளிட்ட பயறுவகைகளை இல்லம்தோறும் வளர்க்கும் பொருட்டு பயறுவகை விதைகள் அடங்கிய தொகுப்பு ஒரு இலட்சம் இல்லங்களுக்கு 100 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி. காஞ்சன் சௌதரி, தோட்டக்கலை துணை இயக்குநர் மா.குருசரஸ்வதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) (பொ) ஜெயமணி, பவானி வேளாண்மை உதவி இயக்குநர் கனிமொழி, விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாய பெருமக்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி தோட்டக்கலை இணை இயக்குநர் அலுவலக வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள தரக்கட்டுப்பாடு பகுப்பாய்வகம்

## கலெக்டர் ச.தினேஷ் குமார் துவக்கி வைத்தார்



கிருஷ்ணகிரி,ஜூலை.05-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் (04.07.2025), தலைமைச் செயலகத்திலிருந்து, காணொளிக்காட்சி வாயிலாக, கிருஷ்ணகிரி தோட்டக்கலை இணை இயக்குநர் அலுவலக வளாகத்தில் ரூ.1 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள தரக்கட்டுப்பாடு ஃ பகுப்பாய்வு ஆய்வகம், கெலமங்கலம் வட்டாரத்தில் ரூ.3 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையம் மற்றும் தளி வட்டார தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தில் ரூ.3 கோடியே 37 இலட்சத்து 14 ஆயிரத்து 401 மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய மாணவர் விடுதி ஆகியவற்றை திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, கிருஷ்ணகிரி தோட்டக்கலை இணை இயக்குநர் அலுவலக வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள தரக்கட்டுப்பாடு ஃ பகுப்பாய்வகத்தில் கலெக்டர் ச.தினேஷ் குமார் குத்து விளக்கு ஏற்றி வைத்து, பகுப்பாய்வு ஆய்வகத்தை பார்வையிட்டார்.

கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பாக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில், கிருஷ்ணகிரி தோட்டக்கலை இணை இயக்குநர் அலுவலக வளாகத்தில், ரூ.50 இலட்சம் மதிப்பில் ஆய்வக உபகரணங்களுடன் ரூ.1 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் பகுப்பாய்வக கட்டிடமும், ஆகியவை கட்டப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதில் ஒரே நேரத்தில் 100 மாணவர்கள் தங்கும் அளவிற்கு ஓரடுக்கு நவீன வசதிகள் கொண்ட 5 தங்கும் வசதி அறைகள் உள்ளது. மேலும் சமையல் அறை, உணவு அருந்தும் அறை, நவீன ஓய்வறை ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது என கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்தார். தொடர்ந்து, கலெக்டர் , 30 விவசாயிகளுக்கு விதை தொகுப்புகள் மற்றும் பழ கன்று தொகுப்புகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை கலெக்டர் (பயிற்சி) செல்வி.க்ரிதி காம்னா தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் இந்திரா, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் (பொ) காளியப்பன், வேளா ண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் சந்திரா, தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் குணவதி, வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் ரவி மற்றும் விவசாயி பெருமக்கள் கலந்து கொண்டனர்.

### ஊட்டச்சத்து வேளாண்மை இயக்க திட்டம்

# நாமக்கல் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு பயறு, காய்கறி மற்றும் பழத்தொகுப்புகள்

## அமைச்சர் மா.மதிவேந்தன் வழங்கினார்



நாமக்கல்,ஜூலை.05-

தமிழ்நாடு முதலமைச்சர் (04.07.2025) சென்னையில், காணொலி காட்சி வாயிலாக வேளாண்மை மற்றும் உழவர; நலத்துறை சார;பில் "ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் 2025-26" திட்டத்தின் கீழ் தேர;ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு 100 சதவிகிதம் அரசு மானியத்தில் பயறு வகைகள் அடங்கிய விதைத் தொகுப்பு> காய்கறிகள் விதைத்தொகுப்பு மற்றும் பழச்செடிகள் தொகுப்புகளை வழங்கி திட்டத்தினை தொடங்கி வைத்தார;கள்.

அதனைத் தொடர்ந்து, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் , கலெக்டர் துர்காமூர்த்தி, தலைமையில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ். மூர்த்தி முன்னிலையில், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறையின் சார்பில் 15 வட்டாரங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு 92,510 எண்ணிக்கையில் பயறு வகை, காய்கறி மற்றும் பழத்தொகுப்புகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மக்கள் நலமும், நல்வாழ்வும் உண்ணும் உணவைப்பொறுத்தே அமைகிறது. உடல்நலம் பேண, ஊட்டச்சத்து மிக்க உணவினை உரிய அளவில் உட்கொள்வது இன்றியமையாதாகும். ஊட்டச்சத்துகளை அளிப்பதில் காய்கறிகள், பழங்கள் பயறுவகைகள், சிறுதானியங்கள் பெரும் பங்காற்றுகின்றன. ஊட்டச்சத்து வழங்கும் இந்த விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரித்து ஊட்டசத்துப் பாதுகாப்பினை உறுதி செய்வதுடன், உழவர்களின் வருமானத்தை உயர்த்தும் வகையில் "ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்" என்னும் புதிய திட்டம் தமிழ்நாட்டில் 2025-26ம் ஆண்டில் 125 கோடி ரூபாய் ஒன்றிய மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும் என அறிவித்தார்கள். அந்த வகையில், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 15 வட்டாரங்களில், விவசாயிகள் மற்றும் பொது மக்களுக்கு வேளாண்மைத் துறை மூலமாக 5,000 எண்ணிக்கையில் ஊட்டச்சத்து பயறு வகை தொகுப்பு மரத் துவரை -5 கிராம், காராமணி - 10 கிராம் மற்றும் அவரை – 10 கிராம் ஆகிய பயிர் வகைகள், தோட்டக்கலைத் துறை மூலமாக 57,260 எண்ணிக்கையில் 6 வகையான காய்கறி விதைகள் கொண்ட காய்கறி தொகுப்பு தக்காளி - 2 கிராம், கத்தரி 2.5 கிராம், மிளகாய் - 3 கிராம், கீரை - 5 கிராம், வெண்டை - 3 கிராம், கொத்தவரை - 3 கிராம் மற்றும் 35,250 எண்ணிக்கையில் 3 விதமான பழச்செடிகள் கொய்யா, பப்பாளி, எலுமிச்சை முதலிய தலா ஒரு எண்கள் என மொத்தம் 92,510 எண்ணிக்கையிலான தொகுப்புகள் 100% மானியத்தில் வழங்கப்படுகிறது.

மேலும், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் இத்திட்டத்தின் கிழ் பயன்பெற உழவன் செயலி மூலமாக அல்லது tnhorticulture.tn.gov.in/kit என்ற இணையதளத்தின் மூலமாக விண்ணப்பித்து பயன்பெறலாம் அல்லது வட்டார வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறை அலுவலகங்களை அணுகி விண்ணப்பித்து பயன்பெறலாம். இந்நிகழ்ச்சியில், இணை இயக்குநர் (வேளாண்மை) பெ.கலைச்செல்வி, துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) புவனேஷ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) க.ராமச்சந்திரன் உட்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், விவசாயிகள் மற்றும் துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ரோட்டரி சங்க புதிய நிர்வாகிகள் தேர்வு



கிருஷ்ணகிரி,ஜூலை.05-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் இயங்கி வரும் ரோட்டரி கிளப் ஆப் ஓசூர் லெஜன்ட் என்கின்ற சங்கத்தின் இந்த ஆண்டு புதிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவராக ஜெயக்குமார் அவர்களும் செயலாளராக யுவராஜ் பொருளாளராக அருண்குமார் ஆகியோர் பதவியேற்றுக் கொண்டனர் தனியார் ஹோட்டலில் நடைபெற்ற இந்த பதவியேற்பு விழாவில் ரோட்டரி சங்க முன்னோடிகள் ஆனந்த் ராஜாமணி, சரவணன், தர்மேஷ் ஆர் பட்டேல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இந்த நிகழ்ச்சியில் அரசு பள்ளி மாணவர்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டாலும் எரியக்கூடிய மின் சேமிப்பு மின்விளக்குகள் வழங்கப்பட்டது. மற்றும் ஏழை பள்ளி மாணவி ஒருவருக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்று புதிதாக பொறுப்பேற்ற பொறுப்பாளர்கள் அனைவரும் இந்த ஆண்டு அரசு பள்ளி ஏழை மாணவர்களுக்கு ஊக்குவிக்கும் விதமாக பல்வேறு உதவிகளை செய்ய உத்தேசித்துள்ளதாகவும், சுத்தமான குடிநீர் வழங்கும் நோக்கத்தில் அரசு பள்ளி மாணவர்களுக்கு சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்கள். இந்த நிகழ்வில் பங்கேற்ற அனைவருக்கும் தலைவர் ஜெயக்குமார் நன்றியை தெரிவித்தார்.

# வெண்ணாம்பட்டி கிராமத்தில் ஆறு வருடங்களாக பூட்டி கிடந்த அம்மன் கோயில் திறப்பு

கிருஷ்ணகிரி,ஜூலை.05-

ஊத்தங்கரை அருகே ஆறு வருடங்களாக பூட்டியிருந்த அம்மன் கோயில் பல போராட்டங்கள் பிறகு தமிழ் புலிகள் கட்சி முயற்சியால் ஆடு பலியிட்டு வழிபட்டனர் தமிழ் புலிகள் கட்சி மாநிலத் துணை செய்தி தொடர்பாளர் வள்ளல் பாரி தெரிவித்தது,

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டம் கல்லாவி அடுத்து வீரணகுப்பம் ஊராட்சி வெண்ணாம்பட்டி கிராமத்தில் உள்ள கிராம மக்கள் 40 ஆண்டுகளாக கோயில் கட்டி வழிபட்டு வந்துள்ளனர், இந்நிலையில் தனிநபர் இந்த கோயிலிடம் தனக்கு சொந்தம் எனவும் கோயிலுக்குள் வரக்கூடாது என்று பூட்டியதால், கோயில் 6 வருடங்களாக திறக்காமல் உள்ளதால் கெட்ட ஆத்மாக்கள் ஊருக்குள் வந்து குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உடல்நிலை சரியில்லாமல் உள்ளனர் என்பதால் உடனடியாக கோவில் திறந்து பூஜைகள் செய்து மாரியம்மன் ஆசியை பெற்றால்தான் நாங்கள் நலமுடன் நோய் நொடியின்றி இருக்க முடியும் என கடந்த சில தினங்களுக்கு முன்பு தமிழ் புலிகள் கட்சியின் தலைமையில் பூட்டிய கோவில் வளாகத்தில் அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட பொருட்களை வைத்து பொங்கல் வைத்து படையிலிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனைத்தொடர்ந்து ஊர் பொதுமக்கள் பூட்டி கிடந்த கோவிலை தமிழ் புலிகள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஒத்துளைப்பில் ஆடு பலியிட்டு பூட்டியிருந்த பூட்டை உடைத்து திறந்து அம்மன் கோவில் வளாகம் மற்றும் கருவறையை சுத்தம் செய்து பொங்கல் வைத்து அம்மனுக்கு மாலை அணிவித்து அலங்கரித்து அபிஷேகம் செய்து கற்பூர தீபாதாரணை செய்து வழிபட்டனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த ஊத்தங்கரை காவல் துணை கண்காணிப்பாளர் சீனிவாசன் தலைமையில் ஏராளமான காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். அப்பொழுது கல்லாவி காவல் ஆய்வாளர் ஜாபர் உசேன், மத்தூர் காவல் ஆய்வாளர் பத்மாவதி உள்ளிட்ட உதவி காவல் ஆய்வாளர்கள் காவலர் பாதுகாப்பு பணியில் இருந்தனர். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் பூவரசன், வடக்கு மாவட்ட செயலாளர் பாலாஜி, தர்மபுரி கிழக்கு மாவட்ட செயலாளர் அண்ணாமலை, கிருஷ்ணகிரி மாவட்ட துணை செயலாளர் முத்துப்பாண்டி, பர்கூர் ஒன்றிய செயலாளர் முருகன், ஒன்றிய அமைப்பாளர் பிரபாகரன், ஒன்றிய இளம் புலி செயலாளர் திருப்பதி, கம்யூனிஸ்ட் கட்சி நாகராஜ், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் கோவிந்தசாமி மற்றும் வேலு உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

**போக்குவரத்து விதிகளை மதிக்கவும்**

# தர்மபுரி அவ்வையார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் உணவு பாதுகாப்பு குறித்து மாணவிகளுக்கு விழிப்புணர்வு

தர்மபுரி,ஜூலை.05-

தர்மபுரி மாவட்ட உணவு பாதுகாப்பு துறை மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர். கைலாஷ்குமார் எம்.பி.,பி.எஸ்., மற்றும் சேலம் பகுப்பாய்வு கூடம் நடமாடும் பகுப்பாய்வு வாகன பொறுப்பாளர் முதுநிலை பொது பகுப்பாய்வாளர். நரசிம்மன் ஏற்பாட்டின்படி, தர்மபுரி மாவட்டத்தில் , நடமாடும் உணவு பகுப்பாய்வு வாகனத்தை முன்னிறுத்தி விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு பகுதியாக தர்மபுரி அவ்வையார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதான வளாகத்தில் நடமாடும உணவு பகுப்பாய்வு வாகனத்தை முன்னிறுத்தி ,பள்ளி உதவி தலைமை



ஆசிரியர் முருகன் வரவேற்புடன், இருபால் ஆசிரியர்கள் முன்னிலையில் தலைமை ஆசிரியர் முனைவர் சுதா தலைமையில் தர்மபுரி நகராட்சி மற்றும் ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால் , உணவுப் பொருட்களில் குறிப்பாக தேயிலை, தேன், நெய், பச்சை பட்டாணி , சமையல் எண்ணெய், மிளகு, வெல்லம் உள்ளிட்ட பல்வேறு பொருட்களில் வீட்டளவிலே கலப்படம் கண்டறிதல் குறித்தும் , அயோடின் உப்பு, அயோடின் இல்லாத உப்பு வேறுபாடுஅறிதலுடன் அயோடின் நுண்ணூட்டச் சத்து அவசியம் குறித்தும் , செறி ஊட்டப்பட்ட உணவுப் பொருட்களான அரிசி, சமையல் எண்ணெய், உப்பு,பால் உள்ளிட்டவற்றில் சேர்க்கப்படும் நுண்ணூட்ட சத்துக்கள் குறித்தும், நேரடியாக உணவுப் பொருட்களைக் கொண்டு செயல் விளக்கம் செய்தார். மேலும் நடமாடும் பகுப்பாய்வு வாகனத்தில் உள்ள எல்இ.டி., தொடுதிரை வாயிலாக உணவுப் பொருட்களில் கலப்படம் குறித்து காணொளி காட்சிகள் காண்பித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. நிகழ்ச்சி இறுதியில் போதைப் பொருட்கள் தவிர்ப்பது, தடுப்பது குறித்தும் , கண்டால் புகார் தெரிவிக்க வேண்டியது குறித்து எடுத்துரைத்தார். நிகழ்வில் இளநிலை பொது பகுப்பாய்வாளர் கார்த்திகேயன், நடமாடும் வாகனத்தின் செயல்பாடுகள் குறித்தும் வாகனத்தில் செய்யப்படும் உணவு மாதிரி பகுப்பாய்வுகள் குறித்தும் விளக்கம் அளித்தார். நிகழ்வில் இருபால் ஆசிரியர்கள், ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவியர்கள் பங்கேற்றனர் . ஆசிரியைகள் மாணவிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. இறுதியில் ஆசிரியர் சிவலிங்கம் நன்றி உரையாற்றினார்.

# வேளாண்மை மற்றும் உழவர்நலத்துறையின் சார்பில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்

## முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்

சேலம்,ஜூலை.05-

தமிழ்நாடு முதலமைச்சர் வேளாண்மை மற்றும் உழவர்நலத்துறையின் சார்பில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத்தினை (04.07.2025) காணொலிக் காட்சி வாயிலாக துவக்கி வைத்ததை தொடர்ந்து. சேலம் மாவட்டம், கன்னங்குறிச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, , சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன் , சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி ஆகியோர் விவசாயிகளுக்கு வேளாண் ஊட்டச்சத்து தொகுப்புகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சிக்கு பின்னர் கலெக்டர் தெரிவித்துள்ளதாவது.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் வெளியிடப்பட்ட 2025-26 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை மற்றும் உழவர்நலத்துறை நிதிநிலை அறிக்கையில் அறிவித்த திட்டமான "ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்" தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் (04.07.2025) துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மக்கள் நலமும், நல்வாழ்வும் உண்ணும் உணவைப் பொறுத்தே அமைகிறது. உடல் நலம் பேண ஊட்டச்சத்து மிக்க உணவினை உரிய அளவில் உட்கொள்வது இன்றியமையாததாகும். ஊட்டச்சத்துகளை அளிப்பதில் காய்கறிகள், பழங்கள், பயறு வகைகள், சிறுதானியங்கள் பெரும் பங்காற்றுகின்றன. ஊட்டச்சத்துகளை வழங்கும் இந்த விளைப்பொருட்களின் உற்பத்தியை அதிகரித்து ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்வதுடன், உழவர்களின் வருமானத்தை உயர்த்தும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஊட்டச்சத்து மிக்க நஞ்சற்ற காய்கறிகள் கிடைப்பதை உறுதி செய்திடவும்,



மக்களின் அன்றாட காய்கறித் தேவைகளை நிறைவு செய்யவும், வீட்டு தோட்டங்களில் காய்கறிகள் வளர்ப்பதை ஊக்குவிக்கும் விதமாக தக்காளி, கத்தரி, வெண்டை, மிளகாய், கொத்தவரை, கீரை வகைகள் போன்ற ஆறு வகையான காய்கறிகள் விதைகள் அடங்கிய 76,300 தொகுப்புகள் ரூ.45.78 இலட்சம் மதிப்பீட்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள விவசாய குடும்பங்களுக்கு 100% மானியத்தில் வழங்கப்படுகிறது.

நகர்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் வசிக்கும் மக்களின் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்வதற்காக விரைவில் பலனளிக்கும் பப்பாளி, கொய்யா, எலுமிச்சை ஆகிய மூன்று வகையான பழச்செடிகள் அடங்கிய பழச்செடித் தொகுப்புகள் 47,000 விவசாய குடும்பங்களுக்கு ரூ.47 இலட்சம் மதிப்பீட்டில் 100% மானியத்தில் வழங்கப்படவுள்ளது. புரதச்சத்து நிறைந்த மரத்துவரை, காராமணி மற்றும் அவரை ஆகிய உள்ளிட்ட பயறுவகைகளை இல்லம்தோறும் வளர்க்கும் பொருட்டு, பயறுவகைகள் விதை தொகுப்பு 5,000 எண்கள் ரூ.3.35 இலட்சம் மதிப்பீட்டில் 100% மானியத்தில் என சேலம் மாவட்டத்தில் 1.18 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.96.13 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இவ்வாறு கலெக்டர் டாக்டர். இரா.பிருந்தாதேவி, தெரிவித்தார்.

இன்றைய தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் வேளாண்மைத்துறையின் சார்பில் 18 விவசாயிகளுக்கும், தோட்டக்கலைத் துறையின் சார்பில் 5 விவசாயிகளுக்கும் என 23 விவசாயிகளுக்கு பயறுவகை விதைத் தொகுப்பு, நெல் நுண்ணூட்டம் மற்றும் உயிர் உரம் தொகுப்பு, சோளம் மினிகிட், உளுந்து மினிகிட், பழச்செடிகள் தொகுப்பு மற்றும் காய்கறி விதை தொகுப்புகளை கலெக்டர் விவசாயிகளுக்கு வழங்கினார்கள். முன்னதாக வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை கலெக்டர் பார்வையிட்டார்கள்-

இந் நி கழ்ச் சி யில் வேளாண்மை இணை இயக்குநர் கு.சீனிவாசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ந.கமலம், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் கே.மஞ்சுளா, வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் குமரன், கன்னங்குறிச்சி பேரூராட்சி தலைவர் குபேந்திரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **GAYATHRI .M, D/o. Murugan, Date of Birth : 04.06.1999, Permanently Residing at : D.No. 49A, Valluvar Nagar, Annadhanapatti, Shevapet PO, Salem District, Tamilnadu - 636 002.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**GAYATHRI .M**

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **MONISHA .A, D/o. Arumugam, Date of Birth : 04.06.2002, Permanently Residing at : D.No. 3/175, Naikkenpatti, Naikkenpatti PO, Salem District, Tamilnadu - 636 307.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**MONISHA .A**

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **PRIYADARSHINI .R, D/o. Rathinam, Date of Birth : 21.05.2001, Permanently Residing at : D.No. 1/91, Kothanur, Perumampatti, Salem District, Tamilnadu - 636 307.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**PRIYADARSHINI .R**

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **ABITHAAMBIGAI .R, D/o. Ram Sampath Kumar .C, Aged 22 Years, Permanently Residing at : D.No. 47/52, Ramasundaram Street, Salem District, Tamilnadu - 636 001.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**ABITHAAMBIGAI .R**

மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் சமூகம், சேலம்.
சி.ப.எண்.192/2024/A5

R.ஜெயக்கொடி, க/பெ. P.ராஜகணபதி,
க.எண்.37, வடக்கு தெரு,
மாரியம்மன் கோவில் அருகில்,
சின்னமநாய்க்கன்பாளையம் அஞ்சல்,
வாழப்பாடி தாலுக்கா, சேலம் மாவட்டம்.
...மனுதாரர்

/Vs/

1. திரு. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், வாழப்பாடி, சேலம் மாவட்டம்.
2. திரு. பிறப்பு/இறப்பு அலுவலர் அவர்கள், வாழப்பாடி, சேலம் மாவட்டம்.
...எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தந்தை ஆறுமுகம், த/பெ. ... 10.03.1984 ... [illegible]

/கோட்டாட்சியர் உத்தரவுப்படி/

R.ஜெயக்கொடி, க/பெ. P.ராஜகணபதி, மனுதாரர், சின்னமநாய்க்கன்பாளையம் அஞ்சல், வாழப்பாடி தாலுக்கா, சேலம் மாவட்டம்.

மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் சமூகம், சேலம்.
சி.ப.எண்.245/2025/A5

R.கௌதமி,
பிளாட் நெ.19, ராஜேஸ்வரி அப்பார்ட்மெண்ட், நெ.58,
Warren Road, மயிலாப்பூர்,
சென்னை - 600 004.
...மனுதாரர்

/Vs/

1. திரு. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், சேலம்.
2. திரு. பிறப்பு/இறப்பு அலுவலர் அவர்கள், சேலம்.
...எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தங்கை V.S. ... 14.03.2022 ... [illegible]

/கோட்டாட்சியர் உத்தரவுப்படி/

R.கௌதமி, மனுதாரர், மயிலாப்பூர், சென்னை - 600 004.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இராசிபுரம்
I.A.No.10 / 2023
O.S.No.20/2021

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம் & டவுன், க.எண்.55/1, வி.நகர் ரோடு முகவரியில் வசிக்கும் முத்துநாயக்கர் மகன் சுமார் 64 வயதுள்ள முத்துநாயக்கர்.
...மனுதாரர் / வாதி

--எதிராக--

சேலம் மாவட்டம், சேலம் வட்டம், ... 24.07.2025 ... [illegible]

P.சந்திரசேகரன், B.A., B.L., அட்வகேட், நீதிமன்ற வளாகம் எதிரில், இராசிபுரம்-637401.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers 17-A/2, Meyyanur Road, Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**நாமகிரிப்பேட்டை (தேர்வு நிலை) பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்**

ந.க.எண்: 158/2025/அ1 — ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை — நாள்: 03.07.2025

15வது நிதி ஆணைய மான்ய திட்டம் - 2025-2026

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சம் | செலுத்த வேண்டிய முன் வைப்புத் தொகை | ஒப்பந்த தாரரின் தகுதி | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | நாமகிரிப்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்திற்குள் ... கட்டுதல் | 65.00 | 65,000 | Class - I | 20 மாதங்கள் |

[illegible]

2. https://tntenders.gov.in ...

செ.ம.தொ.இ/3444/ஒப்பந்தப்புள்ளி/2025

**கீழ்பென்னாத்தூர் முதல்நிலை பேரூராட்சி, திருவண்ணாமலை மாவட்டம்**

ந.க.எண்.117/2024 — ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு — நாள்: 23.06.2025

[illegible]

மதிப்பு ரூ (லட்சத்தில்): 100.00 — டேவணி தொகை ரூ. : 1,00,000/- — பணி முடிக்க வேண்டிய காலம் : 1 வருடம்

கோ.சரவணன், தலைவர், கீழ்பென்னாத்தூர் முதல்நிலை பேரூராட்சி, திருவண்ணாமலை மாவட்டம்.
செ.ம.தொ.இ/ 3448 / ஒப்பந்தப்புள்ளி / 2025
வெ.இராதாகிருஷ்ணன், செயல் அலுவலர், கீழ்பென்னாத்தூர் முதல்நிலை பேரூராட்சி, திருவண்ணாமலை மாவட்டம்.

**நகராட்சி அலுவலகம், திருச்செங்கோடு,**

ந.க.எண்.2424/2025/எச்1. — நாள் : 30.06.2025

திருச்செங்கோடு நகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து வந்த திரு.செந்தில்குமார் த/பெ. சுந்தரம் ஆகிய தாங்கள் எவ்வித முன் அறிவிப்புமின்றி நீண்ட நாட்களாக பணிக்கு வராமல் உள்ளீர்கள். மேலும் தங்களைப்பற்றி எவ்வித தகவலும் இல்லை. எனவே தாங்கள் இப்போது அறிவிப்பை கண்டதும் உடன் தங்களை பற்றிய விபரங்களுடன் திருச்செங்கோடு நகராட்சியில் உரிய அலுவலரை அணுகுமாறு இதன் வாயிலாக தங்களுக்கு அறிவிக்கப்படுகிறது. தாங்கள் வராத பட்சத்தில் தங்கள் மீது நகராட்சி பணியாளர் நடத்தை விதிகள் மற்றும் பணியமைப்பு விதிகளின்படி உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இந்நகராட்சி பணியிலிருந்து நீக்கப்படுவீர்கள் எனவும் அதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஆணையாளர்,
திருச்செங்கோடு நகராட்சி.

வெ.ஆ.எண்/செ.ம.தொ.அ/விளம்பர எண்.171/ நாமக்கல். நாள்.04.07.2025

### டெஸ்ட் கிரிக்கெட்டில் புதிய மைல்கல்:

# குறைந்த வயதில் சதம் அடித்து சச்சினை முந்திய சுப்மன் கில்



**பர்மிங்காம், ஜூலை 05-**

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் குறைந்த வயதில் சதம் அடித்த 2-வது இந்திய கேப்டன் என்ற மாபெரும் சாதனையை சுப்மன் கில் படைத்துள்ளார்.

**587 ரன்கள் குவிப்பு...**

இந்தியா - இங்கிலாந்து அணிகள் இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2-வது போட்டி பர்மிங்காமில் தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸ் பந்து வீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 151 ஓவர்களில் 587 ரன்கள் குவித்து ஆல்-அவுட் ஆனது.

**சுப்மன் கில் 269 ரன்....**

அதிகபட்சமாக இந்திய கேப்டன் சுப்மன் கில் 269 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் சோயிப் பஷீர் 3 விக்கெட்டும், ஜோஷ் டாங்கு, கிறிஸ் வோக்ஸ் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினார். பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 2-வது நாள் ஆட்டநேர முடிவில் 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கு 77 ரன்கள் அடித்திருந்தது. ஜோ ரூட் 18 ரன்களுடனும், ஹாரி புரூக் 30 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். இத்தகைய சூழலில் 3-வது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது.

**குறைந்த வயதில்....**

முன்னதாக இந்த ஆட்டத்தில் இரட்டை சதம் அடித்த இந்திய கேப்டன் சுப்மன் கில்லின் தற்போதைய வயது 25 ஆண்டு 298 நாட்கள். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் குறைந்த வயதில் சதம் அடித்த 2-வது இந்திய கேப்டன் என்ற மாபெரும் சாதனையை சுப்மன் கில் படைத்துள்ளார். இதற்கு முன்னர் சச்சின் (26 ஆண்டு 189 நாட்கள்) 2-வது இடத்தில் இருந்தார்.

### குறைந்த வயதில் சதம்:

1. மன்சூர் அலிகான் பட்டோடி - 23 ஆண்டு 39 நாட்கள்
2. சுப்மன் கில் - 25 ஆண்டு 298 நாட்கள்
3. சச்சின் - 26 ஆண்டு 189 நாட்கள்
4. விராட் கோலி - 27 ஆண்டு 260 நாட்கள்

### பரந்தூர் விமான நிலையம்:

# முதல்வருக்கு விஜய் கடிதம்

**சென்னை, ஜூலை 05-**

பரந்தூரில் விமான நிலையம் அமைக்கப்படாது என்கிற உத்தரவாதத்தை அப்பகுதி மக்களுக்கு உடனடியாக அளிக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு த.வெ.க. தலைவர் விஜய் கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக முதல்வருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், "பரந்தூர் பகுதியில், புதிய விமான நிலையம் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்களும் விவசாயிகளும் வருடக்கணக்காகப் போராடி வருகின்றனர். ஆனால் விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வாதாரங்களை மற்றும் அப்பகுதிகளில் இருக்கும் இயற்கை நீர்நிலைகளை அழித்து அங்குப் புதிய விமான நிலையம் அமைத்தே ஆக வேண்டும் என்ற நிர்பந்தம் யாரால், எதற்காக? மக்கள் நலனில் உண்மையான அக்கறை கொண்ட முதல்வராக, போராட்டக் களத்தில் இருக்கும் மக்களின் பிரதிநிதிகளைத் தாங்கள் இதுவரை நேரில் சந்திக்காதது ஏன்?



விவசாயிகளின் உயிர்நாடியான, காலம் காலமாக அவர்களின் அடையாளமாக இருக்கும் பூர்வீக நிலங்களைப் பறித்து அழித்துவிட்டு, அதற்குப் பதிலாக மாற்று இடத்தை அரசு தருவதாகச் சொல்லப்படுகிறது. ஒருவேளை, அப்படித் தருவதாகச் சொல்லும் மாற்று இடமோ, விவசாயம் உட்பட எவ்வித வாழ்வாதாரத்துக்கும் உதவாத வெற்று இடமாக இருந்தால் நம் விவசாயிகளின் நிலை என்னவாவது?

இப்போதும் ஒன்றும் குறைந்துவிடவில்லை. இப்போதாவது பரந்தூரில் விமான நிலையம் அமைக்கப்படாது என்கிற உத்தரவாதத்தை அவர்களுக்கு உடனடியாக அளிக்கலாம். பரந்தூர் பகுதி மக்களின் கோரிக்கைகள் தொடர்ந்து நிராகரிக்கப்படும் பட்சத்தில், நானே பரந்தூர் பகுதி மக்களை அழைத்துக் கொண்டு வந்து, தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் தங்களை நேரில் சந்தித்து, அவர்கள் சார்பாக முறையிடும் சூழல் உருவாகும்" என்று விஜய் அந்தக் கடிதத்தில் கூறியுள்ளார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் 25 கோடியே 15 லட்சம் ரூபாய் செலவில் ஒரு கால்நடை நோய் புலனாய்வு பிரிவுக் கட்டிடம், ஒரு கால்நடை மருத்துவமனை கட்டிடம், 12 கால்நடை மருந்தகக் கட்டிடங்கள், 2 மாவட்ட கால்நடை பண்ணை கட்டிடங்கள், ஒரு நாய் வளர்ப்பு பிரிவு விரிவாக்க கட்டிடம் ஆகிய கட்டிடங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 208 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள்:

# கால்நடை பராமரிப்புத்துறைக்கு ரூ.25 கோடியில் புதிய கட்டிடங்கள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

**சென்னை, ஜூலை 05-**

சென்னை தலைமை செயலகத்தில் நேற்று நடந்த நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் ரூ.25.15 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். மேலும், கருணை அடிப்படையில் 208 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் அவர் வழங்கினார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில், முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (4.7.2025) தலைமைச் செயலகத்தில், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் 25 கோடியே 15 லட்சம் ரூபாய் செலவில் ஒரு கால்நடை நோய் புலனாய்வு பிரிவுக் கட்டிடம், ஒரு கால்நடை மருத்துவ மனை கட்டிடம், 12 கால்நடை மருந்தகக் கட்டிடங்கள், 2 மாவட்ட கால்நடை பண்ணை கட்டிடங்கள், ஒரு நாய் வளர்ப்பு பிரிவு விரிவாக்க கட்டிடம் ஆகிய கட்டிடங்களை திறந்து வைத்தார். மேலும், பணிக்காலத்தில் உயிரிழந்த பணியாளர்களின் 208 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் கால்நடை பராமரிப்பு உதவியாளர், ஊர்தி ஓட்டுநர் மற்றும் தூய்மைப் பணியாளர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கும் கால்நடைகளை நன்கு பராமரிப்பதற்காகவும், மேம்பட்ட தரமான மருத்துவ சிகிச்சை கால்நடைகளுக்கு அளித்திடவும் கால்நடை மருந்தகங்கள், கால்நடை மருத்துவமனைகள், கால்நடை பன்முக மருத்துவமனைகள், கால்நடை நோய் புலனாய்வு பிரிவு அலுவலகங்கள், கால்நடைகளுக்கான களக் கண்காணிப்பு அலுவலகங்கள் போன்ற பல்வேறு கட்டமைப்புகளை உருவாக்கி, கால்நடை பராமரிப்புத் துறை சார்ந்த கட்டிடங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, கால்நடைகளின் மேம்பாட்டிற்காக அரசு பல்வேறு திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது.

திறந்து வைக்கப்பட்ட கட்டிடங்களின் விவரங்கள்: கன்னியாகுமரி மாவட்டம், திங்கள் நகரில் ஒரு கோடியே 15 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கால்நடை நோய் புலனாய்வு பிரிவுக் கட்டிடம், மயிலாடுதுறை மாவட்டம், மாதானம் கிராமத்தில் 49.50 லட்சம் ரூபாய் செலவிலும், திருவண்ணாமலை மாவட்டம், கோட்டகரம் கிராமத்தில் 54 லட்சம் ரூபாய் செலவிலும், கள்ளக்குறிச்சி மாவட்டம், திருப்பெயர் தக்கா கிராமத்தில் 54 லட்சம் ரூபாய் செலவிலும், தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் கிராமத்தில் 59 லட்சம் ரூபாய் செலவிலும், திருநெல்வேலி மாவட்டம், மருதம்புத்தூர் மற்றும் பாப்பன்குளம் கிராமங்களில் 1.18 கோடி ரூபாய் செலவிலும், தென்காசி மாவட்டம், பன்பொழி மற்றும் வாசுதேவநல்லூர் கிராமங்களில் 1.18 கோடி செலவிலும், புதுக்கோட்டை மாவட்டம், பிள்ளைதண்ணீர்பந்தல் கிராமத்தில் 59 லட்சம் ரூபாய் செலவிலும், விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் வெம்பக்கோட்டை கிராமத்தில் 1.18 கோடி ரூபாய் செலவிலும், இராமநாதபுரம் மாவட்டம், போகளூர் கிராமத்தில் 59 லட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள 12 கால்நடை மருந்தகக் கட்டிடங்களை முதல்வர் திறந்து வைத்தார்.

திருப்பூர் மாவட்டம், காங்கேயத்தில் 90 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருத்துவமனைக் கட்டிடம், நீலகிரியில் 2 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவிலும், சிவகங்கையில் 8 கோடியே 70 ஆயிரம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள மாவட்ட கால்நடை பண்ணை கட்டிடங்கள், சென்னை மாவட்டம், சைதாப்பேட்டையில் 5 கோடியே 95 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நாய் வளர்ப்பு பிரிவு விரிவாக்க கட்டிடம் என மொத்தம் 25 கோடியே 15 லட்சம் ரூபாய் செலவிலான கட்டிடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.


மேலும் கால்நடை பராமரிப்புத் துறையில் பணியின் போது உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 208 நபர்களுக்கு கருணை அடிப்படையில் கால்நடை பராமரிப்பு உதவியாளர், ஊர்தி ஓட்டுநர் மற்றும் தூய்மைப் பணியாளர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

### ஹாரி புரூக் - ஜேமி சுமித் அபாரம்:

# சரிவிலிருந்து மீண்ட இங்கி.,

**பர்மிங்காம், ஜூலை 05-**

இந்தியாவுக்கு எதிரான 2-வது டெஸ்டின் முதல் இன்னிங்சில் ஹாரி புரூக் மற்றும் ஜேமி சுமித் இருவரும் சதமடித்துள்ளனர். இவர்களின் சிறப்பான ஆட்டத்தால் இங்கிலாந்து அணி சரிவிலிருந்து மீண்டது.



**587 ரன்கள் குவிப்பு...**

இந்தியா - இங்கிலாந்து அணிகள் இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2-வது போட்டி பர்மிங்காமில் கடந்த 3 தினங்களுக்கு முன் தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸ் பந்து வீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 151 ஓவர்களில் 587 ரன்கள் குவித்து ஆல்-அவுட் ஆனது. அதிகபட்சமாக இந்திய கேப்டன் சுப்மன் கில் 269 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் சோயிப் பஷீர் 3 விக்கெட்டும், ஜோஷ் டாங்கு, கிறிஸ் வோக்ஸ் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினார்.

**3-வது நாள் ஆட்டம்...**

பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 2-வது நாள் ஆட்டநேர முடிவில் 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கு 77 ரன்கள் அடித்திருந்தது. ஜோ ரூட் 18 ரன்களுடனும் , ஹாரி புரூக் 30 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். இத்தகைய சூழலில் 3-வது நாள் ஆட்டம் நேற்று தொடங்கியது. ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே ஜோ ரூட் (22 ரன்கள்), பென் ஸ்டோக்ஸ் (0) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இருவரின் விக்கெட்டையும் ஒரே ஓவரில் சிராஜ் காலி செய்தார். இதனால் இங்கிலாந்து அணி 84 ரன்களுக்குள் 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

**ஹாரி புரூக் - சுமித்...**

இந்த இக்கட்டான சூழலில் 6-வது விக்கெட்டுக்கு கைகோர்த்த ஹாரி புரூக் - ஜேமி சுமித் கூட்டணி சிறப்பாக விளையாடி அணியை சரிவிலிருந்து மீட்டது. இந்திய பந்துவீச்சை அதிரடியாக எதிர்கொண்ட இந்த ஜோடியில் இருவரும் சதமடித்து அசத்தினர். இவர்களின் பார்ட்னர்ஷிப்பை உடைக்க முடியாமல் இந்திய அணி திணறி வருகிறது. அத்துடன் இவர்களது பார்ட்னர்ஷிப்பும் 200 ரன்களை கடந்து செல்கிறது.

தற்போது வரை இங்கிலாந்து அணி 61 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 304 ரன்கள் அடித்துள்ளது. ஹாரி புரூக் 113 ரன்களுடனும், ஜேமி சுமித் 134 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.

### வரலாற்று சாதனை

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இந்தியாவுக்கு எதிராக 6-வது விக்கெட் அல்லது அதற்கும் கீழே 200+ ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த முதல் இங்கிலாந்து ஜோடி என்ற வரலாற்று சாதனையை ஹாரி புரூக் - ஜேமி சுமித் கூட்டணி படைத்துள்ளது. இதற்கு முன்னர் ஜோ ரூட் - ஜேம்ஸ் ஆண்டர்சன் கூட்டணி 198 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்திருந்ததே அதிகபட்சமாக இருந்தது.

### அ.தி.மு.க. உட்கட்சி விவகாரத்தில்

# விசாரணை நடத்த காலக்கெடு வேண்டாம்: ஐகோர்ட்டில் தேர்தல் ஆணையம் தகவல்

**சென்னை, ஜூலை 05-**

அ.தி.மு.க. உட்கட்சி விவகாரம் தொடர்பான விசாரணை விரைவாக நடத்தப்படும், காலக்கெடு நிர்ணயிக்க வேண்டாம் என தேர்தல் ஆணையம் சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

அ.தி.மு.க. பொதுச் செயலாளராக பழனிசாமி தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்றும், உள்கட்சி விவகாரம் முடிவுக்கு வரும் வரை கட்சிக்கு இரட்டை இலை சின்னத்தை ஒதுக்கக் கூடாது என்றும் கோரி, தேர்தல் ஆணையத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், திண்டுக்கல் சூரியமூர்த்தி, வா.புகழேந்தி, ராம்குமார் ஆதித்தன், ராமச்சந்திரன், சுரேன் பழனிசாமி உள்ளிட்டோர் மனு அளித்துள்ளனர். அந்த மனு மீதான விசாரணை நடந்து வருகிறது.

இந்நிலையில், இந்த மனுக்களை தேர்தல் ஆணையம் விசாரிக்க எதிர்ப்பு தெரிவித்து அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி, சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை ஏற்கெனவே விசாரித்த உயர் நீதிமன்றம், அ.தி.மு.க.வின் உள்கட்சி விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்த தேர்தல் ஆணையத்துக்கு அதிகார வரம்பு உள்ளதா என்பதை ஆரம்பக்கட்ட விசாரணை நடத்தி முடிவுக்கு வரவேண்டும் என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டிருந்தது.

உயர் நீதிமன்றம் இது தொடர்பாக உத்தரவு பிறப்பித்து 7 வாரங்கள் கடந்த நிலையில், தேர்தல் ஆணையத்தின் ஆரம்பக்கட்ட விசாரணைக்கு காலவரம்பு நிர்ணயம் செய்ய வேண்டும் எனக் கோரியும் அ.தி.மு.க. பொதுச் செயலாளரான பழனிசாமி தரப்பில் புதிதாக மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு நீதிபதிகள் ஆர்.சுப்ரமணியன், கே.சுரேந்தர் அமர்வில் நேற்று (ஜூலை 4) மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, தேர்தல் ஆணையம் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் நிரஞ்சன், கூடுதல் கால அவகாசம் வேண்டும் என்றும், எவ்வளவு விரைவாக விசாரணை நடத்த முடியுமோ அவ்வளவு விரைவாக நடத்தவோம். காலக்கெடு எதுவும் நிர்ணயிக்க வேண்டாம் என தெரிவித்தார். அப்போது ஓ.பி.எஸ் மற்றும் பெங்களூர் புகழேந்தி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், தங்கள் தரப்புக்கு மனுவின் நகல்கள் வழங்கப்படவில்லை என தெரிவித்தனர். இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், ஓ.பி.எஸ். மற்றும் புகழேந்தி தரப்புக்கு, நகல்களை வழங்க உத்தரவிட்டு விசாரணையை வரும் 10-ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

### அஜித்குமார் கொலை வழக்கு:

# நீதிபதியிடம் திருப்புவனம் அரசு மருத்துவர் சாட்சியம்

**சிவகங்கை, ஜூலை 05-**

உயரதிகாரிகள் கூறியதாக, போலீஸார் அஜித்குமார் உடலை எடுத்துச் சென்றனர் என மாவட்ட நீதிபதியிடம் திருப்புவனம் அரசு மருத்துவர் கார்த்திகேயன் சாட்சியம் அளித்தார்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே மடப்புரம் கோவில் காவலாளி அஜித்குமாரை போலீஸார் கொடூரமாக தாக்கி ஜூன் 28-ம் தேதி கொலை செய்தனர். இதையடுத்து அதை மறைக்க நினைத்த போலீஸார், தாங்கள் விசாரித்து கொண்டிருந்தபோது, அஜித்குமார் தப்பியோட முயன்று கீழே விழுந்தார். அதில் அவருக்கு வலிப்பு ஏற்பட்டு, ஆட்டோவில் திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம்.

தொடர்ந்து மேல்சிகிச்சைக்காக சிவகங்கை தனியார் மருத்துவமனைக்கும், பின்னர் அங்கிருந்தும் மதுரை தனியார் மருத்துவமனைக்கும் கொண்டு சென்றோம். அங்கு அஜித்குமார் உயிரிழந்ததை மருத்துவர்கள் உறுதி செய்ததாக கூறினர்.

இந்நிலையில், நேற்று (ஜூலை 4) மாவட்ட நீதிபதி முன் திருப்புவனம் அரசு மருத்துவமனை மருத்துவர் கார்த்திகேயன், ஆட்டோ ஓட்டுநர் அய்யனார் ஆஜராகி சாட்சியம் அளித்தனர்.

பின்னர் அரசு மருத்துவர் கார்த்திகேயன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: "ஜூன் 28 மால 6.30 மணியளவில் அஜித்குமாரை ஆட்டோவில் போலீஸார் கொண்டு வந்தனர். நான் பரிசோதித்தபோது அஜித்குமார் ஏற்கெனவே உயிரிழந்தது தெரிந்தது. அதை நான் போலீஸாரிடம் தெரிவித்தேன். உடலை பிரேதப் பரிசோதனை அறையில் வைக்கச் சொன்னேன். ஆனால், உயரதிகாரிகள் கூறியதாக, போலீஸார் உடலை எடுத்துச் சென்றனர். இதை தான் நீதிபதியிடம் தெரிவித்தேன். மற்றபடி, அவரது உடலில் எந்த மாதிரியான காயங்கள் இருந்தன என்பதை நான் கவனிக்கவில்லை" என்றார்.

மடப்புரத்தைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் அய்யனார் கூறுகையில், "எனது ஆட்டோவில் தான் போலீஸார் அஜித்குமாரை ஏற்றி, திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அஜித்குமாரை 4 போலீஸார் தூக்கி வந்தனர். அப்போது அவர் உடல் அசைவற்று இருந்தது. கண்கள் மூடி இருந்தன. அவர் இறந்துவிட்டதாக போலீஸாரும் பேசிக் கொண்டனர்." என்றார்.

### செஸ் விளையாடவே பிடிக்கவில்லை:

# குகேஷிடம் தோற்ற கார்ல்சென் விரக்தி




**சாக்ரப், ஜூலை 05-**

தற்போதைக்கு தனக்கு செஸ் விளையாடவே பிடிக்கவில்லை என்று உலகின் நம்.1 வீரரான மாக்னஸ் கார்ல்சென் தெரிவித்துள்ளார்.

**கார்ல்செனுடன்...**

குரேஷியாவில் நடைபெறும் சூப்பர் யுனைடெட் ரேபிட் & பிளிட்ஜ் தொடரின் 6-ஆவது சுற்றில் உலக சாம்பியனும் தமிழக வீரருமான குகேஷ் முன்னாள் உலக சாம்பியனும் உலகின் நம்.1 வீரரான மாக்னஸ் கார்ல்செனும் மோதினார்கள். குகேஷ் கறுப்பு நிற காய்களுடனும் கார்ல்சென் வெள்ளை நிற காய்களுடன் விளையாடினார்கள். இந்தப் போட்டியில் குகேஷின் 49-ஆவது நகர்த்தலில் கார்ல்சென் தனது தோல்வியை ஒப்புக் கொண்டார்.

**2 முறை தோல்வி...**

சமீபத்தில் நார்வே செஸ் தொடரிலும் கார்ல்செனை குகேஷ் வீழ்த்தினார். இருப்பினும், கார்ல்சென் 7-ஆவது முறையாக நார்வே செஸ் பட்டத்தை வென்றார். அதனால்தான் அவர் உலகின் நம்.1 வீரராக இருக்கிறார். தமிழக வீரர் குகேஷை பல முறை பலவீனமாக வீரர் என்றுகூறிய கார்ல்சென் ஒரே மாதத்திற்குள் 2 முறை தோல்வியுற்றுள்ளார்.

**பிடிக்கவில்லை...**

போட்டிக்குப் பிறகு கார்ல்சென் கூறியதாவது: தற்போதைக்கு எனக்கு செஸ் விளையாடவே பிடிக்கவில்லை. நான் விளையாடும் போது எனக்கு சரியான மன நிலை அமையவில்லை. நான் தொடர்ச்சியாக தயங்கி தயங்கி விளையாடியதால் தற்போது மோசமான நிலைக்கு உள்ளாகியுள்ளேன். குகேஷ் சிறப்பாக விளையாடி வருகிறார். இந்தத் தொடர் மிகவும் நீண்டது. தொடர்ச்சியாக 5 போட்டிகளில் வென்றது பாராட்டத்தக்கது என்றார்.

**மரம் மனிதனின் உரம்**

### பியூ வெப்ஸ்டர் அசத்தல்

**பா**ர்டர்-கவாஸ்கர் தொடரில் 5-ஆவது போட்டியில் ஆஸி. அணிக்காக அறிமுகமானார் பியூ வெப்ஸ்டர். 31 வயதாகும் இவர் முதல்தர கிரிக்கெட்டில் சிறப்பாக விளையாடியதால் ஆஸி. அணியில் இடம் கிடைத்தது. முதல் போட்டியில் முதல் இன்னிங்ஸிலேயே அரைசதம் அடித்து அசத்தினார். மிட்செல் மார்ஷுக்குப் பதிலாக அணியில் இடம் பிடித்த இவர் தொடர்ச்சியாக சிறப்பாக விளையாடி வருகிறார்.

ஆஸி. அணி தற்போது மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் விளையாடி வருகிறது. முதல் டெஸ்ட்டிலும் அரைசதம் அடித்த வெப்ஸ்டர், இரண்டாவது டெஸ்ட்டில் 100 ரன்களுக்குள் 5 விக்கெட்டுகள் இழந்த நிலையில் நிதானமாக விளையாடி அரைசதம் அடித்தார். 6 போட்டிகளில், குறிப்பிட்டு சொல்லவேண்டுமானால் 9 இன்னிங்ஸ்களில் 4 அரைசதங்களை அடித்து அசத்தியுள்ளார். பியூ வெப்ஸ்டர் 57, 39, 23, 31, 72, 9, 11, 63, 60 என சிறப்பாக விளையாடியுள்ளார். சராசரி 45.63ஆக இருக்கிறது. பந்துவீச்சில் வெப்ஸ்டர் 5 விக்கெட்டுகளும் எடுத்துள்ளார். டெஸ்ட்டில் ஒரு நல்ல ஆல்-ரவுண்டராக மிளிரும் வெப்ஸ்டருக்கு ஆஸி. ரசிகர்களிடையே வாழ்த்துகள் குவிந்து வருகின்றன.

### டெஸ்ட் தொடருக்கு சிக்கல்?

**இ**ந்திய கிரிக்கெட் அணி தற்போது இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இந்த தொடர் நிறைவடைந்ததும் இந்திய கிரிக்கெட் அணி வங்காளதேசத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர் அடுத்த மாதம் 17ம் தேதி தொடங்குகிறது.

இந்நிலையில், தற்போது வங்காளதேசத்தில் நிலவி வரும் அரசியல் சூழல் காரணமாக இந்திய அணி வங்காளதேசத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாட வாய்ப்பு இல்லை என தகவல் வெளியாகி உள்ளது. இது தொடர்பான அறிவிப்பை பி.சி.சி.ஐ., வங்காளதேச கிரிக்கெட் வாரியத்திடம் தெரிவித்து விட்டதாக கூறப்படுகிறது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியமோ, வங்காளதேச கிரிக்கெட் வாரியமோ இதுதொடர்பான அறிவிப்பை இது வரை அதிகாரப்பூர்வமாக வெளியிடவில்லை. எனினும், இந்த தொடரின் ஒளிபரப்பு உரிமைகள் விற்பனை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதன் காரணமாக இந்திய அணி, வங்காளதேசத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்வதில் சிக்கல் நிலவுகிறது.

### காவலாளி அஜித்குமார் கொலை வழக்கு:

# த.வெ.க. கோரிக்கையை நிராகரித்தது ஐகோர்ட்

**சென்னை, ஜூலை 05-**

மடப்புரம் கோயில் காவலர் அஜித்குமார் காவல்துறை விசாரணையில் கொல்லப்பட்டதைக் கண்டித்து த.வெ.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி வழங்கக் கோரிய மனுவை அவசர வழக்காக விசாரிக்க சென்னை உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டது.

சிவகங்கை மாவட் டம், திருப் புவனம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட மடப்புரம் கோவில் காவலர் அஜித்குமார் மரணத்துக்கு நீதி கேட்டும், உயர் நீதிமன்றத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் சிறப்புப் புலனாய்வுக் குழு அமைத்து நீதி விசாரணை நடத்த வேண்டும் என வலியுறுத்தியும், கடந்த 4 ஆண்டுகளில் 24 பேர் காவல் நிலையத்தில் மரணம் அடைந்தது குறித்து உயர் நீதிமன்றமே அதிருப்தி தெரிவித்துள்ள நிலையில், இதுகுறித்து தமிழக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வலியுறுத்தியும் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்துக்கு காவல்துறை அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி வேல்முருகன் முன்பு நேற்று (ஜூலை 4) த.வெ.க. சார்பில் ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதி கோரும் மனுவை இன்று பிற்பகலில் விசாரணைக்கு எடுக்கக் கோரி முறையிடப்பட்டது. இதனை ஏற்க மறுத்த நீதிபதி, "இந்த வழக்கை அவசர வழக்காக விசாரிக்க என்ன அவசரம்?" என்று கேள்வி எழுப்பினார். இந்த மனு எண்ணிடப்பட்டு வந்தால், திங்கள்கிழமை விசாரணைக்கு எடுக்கப்படும், என்று நீதிபதி தெரிவித்தார்.

# தி.மு.க. புதிய உறுப்பினர்கள் சேர்க்கை: வீடு வீடாக சென்று மக்களை சந்தித்தார் அமைச்சர் தங்கம் தென்னரசு



**பரமக்குடி, ஜூலை 05-**

பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட இரண்டாவது வார்டு, தர்மராஜபுரம் பகுதியில் வீடு வீடாக சென்று தி.மு.க. புதிய உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் நடந்தது.

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி இரண்டாவது வார்டு பகுதியில் தி.மு.க. சார்பில் புதிய உறுப்பினர் சேர்க்கை முகாம் நேற்று நடைபெற்றது.

இம்முகாமிற்கு ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்எல்ஏ தலைமையில் அமைச்சர் தங்கம் தென்னரசு வீடு வீடாக சென்று வீடுகளில் அமர்ந்து புதிய உறுப்பினர்களை தி.மு.க.வில் இணைத் துக் கொண் டார். மேலும் பழைய உறுப்பினராக இருந்தவர்களை மீண்டும் புதுப்பித்துக்கொண்டனர்.

அதற்கான விண்ணப்ப படிவங்களை அமைச்சர் உறுப்பினர்களிடம் வழங்கினார்.

அந்தப் படிவத்தை பூர்த்தி செய்து ஆன்லைன் செயலி மூலம் புதிய உறுப்பினர்கள் தங்களை கட்சியில் இணைத்துக் கொண்டனர். அப்போது அவர்களிடம் அமைச்சர் தங்கம் தென்னரசு எந்த நெருக்கடியான சூழலிலும் தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காப்பாற்றபட வேண்டும் என நினைக்கிறீர்களா? டெல்லியின் அதிகாரத்திற்கு அடிபணியாமல் தமிழ்நாட்டின் உரிமையை காக்கும் முதலமைச்சர் தான் நம் மாநிலத்தை ஆள வேண்டுமா? உள்பட பல்வேறு கேள்விகளை கேட்டார். அதற்கு அவர்கள் கூறிய பதிலையும் அந்த படிவத்தில் பூர்த்தி செய்தார். பின்பு நிர்வாகிகளிடம் புதிதாக சேர்க்கப்படும் உறுப்பினர்களின் விபரங்கள் குறித்து கேட்டறிந்தார். இந்த நிகழ்ச்சியில் பரமக்குடி எம்.எல்.ஏ. முருகேசன், தெற்கு நகரச் செயலாளர் சேர்மன் சேது கருணாநிதி, முன்னாள் அமைச்சர் டாக்டர் சுந்தர்ராஜன், வடக்கு நகர் செயலாளர் ஜீவரத்தினம், நகர் இளைஞர்அணி அமைப்பாளர்கள் வழக்கறிஞர் துரை முருகன், ராஜா சேதுபதி உள்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## ஸ்ரீவில்லி., திருப்பல்லாண்டு பாடிய பெரியாழ்வார் செப்பு தேரில் வீதி உலா



**ஸ்ரீவில்லிபுத்தூர், ஜூலை 05-**

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் திருப்பல்லாண்டு பாடிய பெரியாழ்வார் என்னும் விஷ்ணு சித்தரின் தனிச் சன்னதி உள்ளது. ஆண்டுதோறும் ஆனி மாதம் பெரியாழ்வாருக்கு சுவாதி உற்சவம் சிறப்பாக நடைபெறும். இந்த ஆண்டு பெரியாழ்வார் ஆனி சுவாதி உற்சவம் கடந்த 26-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. முக்கிய நிகழ்ச்சி ஆன திருப்பல்லாண்டு பாடிய பெரிய ஆழ்வார் செப்பு தேரோட்டம் நேற்று தொடங்கியது பெரியாழ்வாருக்கு சிறப்பு திருமஞ்சனம் அலங்காரம் செய்யப்பட்டு காலை செப்பு தேரோட்டம் துவங்கியது. ஏராளமான பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்ப தேரினை வடம்பிடித்து நான்கு ரத வீதிகள் வெளியே ஊர்வலமாக கொண்டு வந்து நிலையத்தில் சேர்ந்தனர். பெரியாழ்வார் திருவிழா ஏற்பாடுகளை கோவில் அறங்காவலர் குழு தலைவர் வெங்கட்ராமராஜா மதுரை அறநிலையத்துறை துறை இணை ஆணையர் மாரியப்பன் அறங்காவலர்கள் ராம்குமார் வரதராஜன் அ.உமாராணி நளாயினி தாயில்பட்டி வெ.மனோகரன் வெங்கடசாமி விருதுநகர் உதவியாளர் முநாகராஜன் கோவில் செயல் அலுவலர் சக்கரையம்மாள் ஆய்வாளர் முத்து மணிகண்டன் மற்றும் கோயில் அலுவலர்களும் பணியாளர்களும் செய்திருந்தனர்.

## தேனி மாவட்டத்தில்
# கலெக்டர் ரஞ்ஜீத் தலைமையில் கனரா வங்கியின் 120-வது நிறுவன வார விழா



**தேனி, ஜூலை 05-**

தேனி மாவட்டம், கருவேல்நாயக்கன்பட்டியில் உள்ள கனரா வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில் கனரா வங்கியின் 120-ஆவது நிறுவன வார விழா கடந்த 3-ம் தேதி மாவட்ட கலெக்டர் ரஞ்ஜீத் சிங் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:-

கனரா வங்கியின் ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் மூலம் செல்போன் பழுது நீக்குதல், வீட்டு உபயோகப்பொருட்கள் பழுது நீக்கம், பிளம்பிங், அலுமினியம் பேப்ரிக்கேஷன் வெல்டிங், காளான் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, மற்றும் வேளாண் உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு தொழிற் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. தேனி மாவட்டத்தில் விவசாயம் சார்ந்த தொழில் வாய்ப்புகள் ஏராளமாக உள்ளது. பயிற்சி முடித்து, புதிதாக தொழில் தொடங்கும் தொழில் முனைவோர்களுக்கு வங்கி கடனும் பெற்றுத்தரப்படும். இதனை இளைஞர்கள் பயன்படுத்தி தொழில் முனைவோர்களாக உருவாக வேண்டும். மேலும், தொழில் முனைவோர்களுக்கு மாவட்ட நிர்வாகம் மற்றும் அரசுத்துறைகளின் சார்பில் ஊக்குவிப்பும் ஆதரவும் அளிக்கப்படும். கிராமப்புற இளைஞர்களை தொழில்முனைவோர்களாக உருவாக்குவதற்கு இது போன்ற இலவச பயிற்சியினை அளிப்பதற்கு கனரா வங்கியின் RSETI நிறுவனத்திற்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன் என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, செல்போன் பழுதுநீக்குதல் மற்றும் காளான் வளர்ப்பு தொழில் பயிற்சிகள் முடித்த மாணவர்களுக்கு தேசிய தொழிற் பயிற்சி சான்றிதழ்களை மாவட்ட கலெக்டர் வழங்கினார். பின்னர் ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவன வளாகத்தில் நடைபெற்ற மரக்கன்றுகள் நடும் விழாவில் மாவட்ட கலெக்டர் மரக்கன்றுகளை நடவு செய்தார்கள். இந்நிகழ்வில் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர் ரவிக்குமார், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ராமநாதபுரத்தில் புதிதாக கட்டப்பட்ட
# வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை வளாகம் திறப்பு



**ராமநாதபுரம், ஜூலை 05-**

ராமநாதபுரத்தில் ரூ.84 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை வளாக திறப்பு விழா நடைபெற்றது. இதில் கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் வேளாண்மை - உழவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் புதிதாக கட்டப்பட்ட கட்டிடங்களை காணொளிக் காட்சியின் மூலம் திறந்து வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ராமநாதபுரத்தில் வேளாண்மை - உழவர் நலத்துறையின் மூலம் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை வளாகத்தில் ரூ.84 லட்சம் மதிப்பீட்டில் வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் விவசாயிகள் ஆலோசனை மையக் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதை விவசாயிகள் பயன்பாட்டிற்கும், அதே போல் போகலூர் ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் ரூ.59 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட கால்நடை மருந்தக கட்டடத்தையும் தமிழ்நாடு முதலமைச்சர் காணொளிக்காட்சியின் மூலம் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து ராமநாதபுரத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை வளாகத்தில் உள்ள வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் விவசாயிகள் ஆலோசனை மைய கட்டட திறப்பு விழா நிகழ்ச்சியில்; மாவட்ட கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் பங்கேற்று குத்துவிளக்கேற்றி வைத்து வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண் பொறியியல் துறை மூலம் 25 பயனாளிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் வழங்கினார்.

மேலும் போகலூர் ஊராட்சியில் நடைபெற்ற கால்நடை மருந்தக கட்டட திறப்பு விழா நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மரு.ரவிச்சந்திரன், பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் (பொ) கங்காதேவி ஆகியோர் குத்துவிளக்கேற்றி வைத்து பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மைத்துறை இணை இயக்குநர் (பொ) பாஸ்கரமணியன், ராமநாதபுரம் நகர் மன்றத்தலைவர் ஆர்.கே.கார்மேகம், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை செயலர்கள் கோபாலகிருஷ்ணன், மல்லிகா, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ஆறுமுகம், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் அருண்குமார், தோட்டக்கலைத்துறை உதவி செயற்பொறியாளர் சிவகுமார், தோட்டக்கலைத்துறை உதவி அலுவலர் அண்ணாதுரை மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திருமங்கலத்தில் பரபரப்பு:
# தடையை மீறி சென்ற கனரக வாகனங்களை சிறைபிடித்து பொதுமக்கள் போராட்டம்

**திருமங்கலம், ஜூலை 05-**

மதுரை மாவட்டம், திருமங்கலம் நகர் விமான நிலைய சாலையில் ரயில் நிலையம் அருகேயுள்ள ரயில்வே கேட் அடிக்கடி மூடப்படுவதால் அப்பகுதியில் உள்ள காமராஜபுரம் கற்பக நகர் சுங்குராம்பட்டி விடத்தக்குளம் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து வரும் வாகன ஓட்டிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகினர். இந்த பகுதியில் மேம்பாலம் கட்ட வேண்டும் என 20 ஆண்டுகளுக்கு மேலாக கோரிக்கை வைக்கப்பட்ட நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்பு ரூ.31 கோடியில் மேம்பாலம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டது. மேம்பாலம் மற்றும் பாலத்திற்கான சர்வீஸ் சாலைகள் என இருபுறமும் அமைப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு கட்டிடங்கள் அனைத்தும் இடிக்கப்பட்டன. பாலப் பணிகள் சர்வீஸ் சாலை அமைக்கப்பட்ட பின்பு தொடங்கும் என கூறப்பட்டு வந்த நிலையில் சர்வீஸ் சாலையில்லாமல் மேம்பால பணிகள் நடைபெற்று வந்ததால் கடந்த சில மாதங்களாக இப்பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. மேலும் மழைக்காலத்தில் சேரும் சகதியுமாக மாறி வாகன ஓட்டிகள் விபத்தில் சிக்கும் அபாயம் ஏற்பட்டடுள்ளது.

சரியான சாலை வசதி இல்லாததால் இந்த பகுதியில் சென்ற நகராட்சி ஒப்பந்த பெண் தூய்மை பணியாளர்கள் இருவர், தி.மு.க பிரமுகர் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தால் அவ்வழியே கனரக வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்பட்டு குறித்த நேரத்தில் மட்டும் செல்ல அனுமதிக்கப்பட்டது ஆனால் வழக்கத்திற்கு மாறாக கனரக வாகனங்கள் தடை செய்யப்பட்ட நேரத்திலும் சென்று வந்துள்ளது. இது தொடர்பாக அதிகாரிகளிடம் முறையிட்டும் நடவடிக்கை எடுத்ததால் நேற்று முன்தினம் இரவு அப்பகுதி பொதுமக்கள் திரண்டு வந்து கனரக வாகனங்களை சிறை பிடித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பாக போலீசார் பேச்சு வார்த்தை நடத்தி கனரக வாகனங்கள் தடை செய்யப்பட்ட நேரத்தில் வந்தால் அவைகளுக்கு உரிய அபராதம் விதிப்பதாக தெரிவித்ததன் பேரில் பொது மக்கள் போராட்டத்தை கைவிட்டனர். இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# 2026 ஜனவரி முதல் மதுரை தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவ கல்லூரி செயல்பட தொடங்கும்: நிர்வாக இயக்குநர் அனுமந்த்ராவ் பேட்டி




**திருமங்கலம், ஜூலை 05-**

2026 ஜனவரி மாதம் முதல் மதுரை தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி செயல்படும் என மதுரை எய்ம்ஸ் நிர்வாக இயக்குநர் அனுமந்த்ராவ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை பணிகள் தொடர்பான நிர்வாகக் குழுவின் ஆலோசனை கூட்டம் தோப்பூரிலுள்ள எய்ம்ஸ் நிர்வாக அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு மதுரை எய்ம்ஸ் கட்டுமான நிர்வாக குழுவின் தலைவர் பிரசாந்த் லவன்யா தலைமையில் நேற்று நடைபெற்றது. காணொலி வாயிலாக நடைபெற்ற இந்த கூட்டத்தில் மதுரை எய்ம்ஸ் நிர்வாக இயக்குநர் அனுமந்தராவ், விருதுநகர் எம்.பி மாணிக்கம் தாகூர், தென்காசி எம்.பி ராணி ஸ்ரீகுமார், ராஜ்ய சபா எம்.பி சந்திரசேகரன், டாக்டர் சரவணன் சுப்பையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டம் நிறைவடைந்த பின்னர் செய்தியாளர்களை சந்தித்த எய்ம்ஸ் நிர்வாக இயக்குநர் அனுமந்த்ராவ் கூறுகையில் இந்த கூட்டத்தில் மத்திய துணை செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் உட்பட 8 பேர் ஆன்லைன் மூலம் கலந்து கொண்டனர். இரண்டு மணி நேரத்துக்கு மேலாக இந்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. எய்ம்ஸ் நான்காவது ஆண்டு மாணவர் சேர்க்கை நிறைவு பெற்று ராமநாதபுரத்தில் செயல்பட்டு வரும் கல்லூரியில் மாணவர்கள் படித்து வருகிறார்கள். அங்கு போதிய வசதிகள் இல்லாததால் தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமான பணிகள் 1700 தொழிலாளர்களை கொண்டு எல் அண்டு டி நிறுவனத்தின் மூலம் இரவு பகலாக நடைபெற்று வருகிறது. மேலும் எய்ம்ஸ் மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்று வரும் பணிகள் குறித்தும் எம்.பிக்கள் ஆய்வு மேற்கொண்டனர். தேகப் தற்போது மருத்துவக் கல்லூரிக்கான கட்டுமான பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது. வரும் 2026 ஜனவரி மாதம் தைபொங்கல் தினத்தன்று மதுரை எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி தோப்பூரிலுள்ள எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியின் புதிய கட்டிடத்தில் செயல்படும். இதன் காரணமாக ஜனவரி மாதத்திற்குள் மருத்துவக் கல்லூரியின் வகுப்பறைகள், ஆய்வகங்கள், மாணவ, மாணவியருக்கான ஹாஸ்டல் வசதிகள் மற்றும் முதற்கட்டமாக நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் 150 படுக்கைகளுடன் கூடிய சிறப்பு மருத்துவமனை இயங்கிடும். அதே போல் வரும் 2027 ஆம் ஆண்டிற்குள் எய்ம்ஸ் மருத்துவ மனை யின் பணிகள் அனைத்தும் நிறைவு பெற்று மதுரை எய்ம்ஸ் முழுமையாக செயல்படத் துவங்கும். மேலும் மாதந்தோறும் கட்டுமான பணிகள் குறித்த புகைப்படங்களை வெளியிடும்படி எல் அண்டு டி நிறுவனத்திடம் கேட்டுள்ளோம் என்று தெரிவித்தார்.

# நத்தத்தில் கார்- பைக் நேருக்கு நேர் மோதல்: அண்ணன், தம்பி படுகாயம்

**நத்தம், ஜூலை 05-**

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர்-குட்டத்தை சேர்ந்தவர் முனியப்பன்(47), இவர் நேற்று காலை தனது பைக்கில் தனது அண்ணன் தர்மராஜன் (50) என்பவருடன் நத்தம்-வெள்ளக்குட்டு பகுதிக்கு சொந்த வேலையாக சென்று விட்டு மீண்டும் ஊருக்கு திரும்பி கொண்டிருந்தனர்.

அம்மன்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்த போது எதிரே உடுமலைபேட்டையை சேர்ந்த நேதாஜி (47) என்பவர் ஓட்டி சென்ற கார் பைக் மீது மோதியது.

இதில் தூக்கிவீசப்பட்ட முனியப்பன் மற்றும் தர்மராஜனுக்கு கை, கால்களில் பலத்த காயம் ஏற்பட்டது. ஆபத்தான நிலையில் அக்கம் பக்கத்தினர் இருவரையும் மீட்டு நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

பின்னர் இருவரும் மேல் சிகிச்சைக்காக இருவரும் மதுரை அரசு மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து நத்தம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

# ஒட்டன்சத்திரத்தில் மாற்றுத் திறனாளிகள் குறைதீர்க்கும் முகாம்



**ஒட்டன்சத்திரம், ஜூலை 05-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் மாற்று மாற்றுத்திறனாளிகள் நலத் துறை மற்றும் அலிம்கோ நிறுவனம் இணைந்து மாற்றுத்திறனாளிகள், முதியோர் குறைதீர்க்கும் முகாம் முன்னாள் வாடிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் ஜோதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. முகாமில் வட்டாட்சியர் சஞ்சய் காந்தி, வட்டார வளர்ச்சி அலுவலர் காமராஜ், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் தங்கவேல், ஒன்றிய செயலாளர்கள் தர்மராஜன், பாலு உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர் முகாமில மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், உதவித்தொகை குடும்ப அட்டைகள், அடையாள அட்டைகள் வழங்கி மருத்துவ ஆலோசனை மற்றும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டது. முகாமில் சமூகபாது காப்பு திட்ட வட்டாட்சியர் பானுலட்சுமி, துணை வட்டாட்சியர்கள் முருகேசன், கனகராஜ், வட்ட வழங்கல் அலுவலர் சேவியர், வருவாய் ஆய்வாளர் பூர்ணிமா, ஒன்றிய அவைத் தலைவர் செல்வராஜ், நகரஅவைத் தலைவர் சோமசுந்தரம், கிராம நிர்வாக அலுவலர்கள் சிவராஜ்,, வரதராஜன், கிராம உதவியாளர்கள் விஜயபாஸ்கரன், பைசல்முகம்மது , இயன்முறை மருத்துவர் திவ்யா, சிறப்பு ஆசிரியர்கள் செல்லாயி, சரளா, உள்ளிட்டேர்டோர் கலந்து கொண்டனர். முகாமில் ஒட்டன்சத்திரம் பகுதிகளைச் சேர்ந்த சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் முதியோர் கலந்து கொண்டனர். படம். திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் மாற்றுத்திறனாளிகள் குறைதீர் முகாம் நடைபெற்றது.



**மதுரை மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் நடைபெறும் முகாம்கள் குறித்து அனைத்துறை அலுவலர்களுடான ஆலோசனைக் கூட்டம் கலெக்டர் பிரவீன் குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.**



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சிறப்பு திட்ட செயலாக்கத்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச்செயலாளர் நா. முருகானந்தம், கூடுதல் தலைமைச்செயலாளர்கள் மங்கத்ராம் சர்மா, பிரதீப்யாதவ், நிதித்துறை முதன்மைச்செயலாளர் த.உதயச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருச்செந்தூர் கோவிலில் ரூ.10.57 கோடி மதிப்பிலான பக்தர்கள் தங்கும் விடுதி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, ஜூலை 05-

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ரூ.10.57 கோடி செலவில் கட்டப்பட்ட பக்தர்கள் தங்கும் விடுதியை திறந்து வைத்து, ராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோவிலின் 6 பணியாளர்களுக்கு அர்ச்சகர்களாக பதவி உயர்வு ஆணைகளை முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று வழங்கினார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (4.7.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் 10.57 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள 52 அறைகளுடன் கூடிய பக்தர்கள் தங்கும் விடுதியினை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். மேலும், ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாத சுவாமி திருக்கோவிலின் 6 திருக்கோவில் பணியாளர்களுக்கு அர்ச்சகர்களாகப் பதவி உயர்வு வழங்கி, அதற்கான ஆணைகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத் துறையானது தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோவில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்குகள் நடத்துதல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோவிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது. மேலும், பக்தர்கள் அதிகளவில் வருகைதரும் திருக்கோவில்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவினை ஏற்படுத்தி, பக்தர்களின் அனைத்து தேவைகளும் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், அறுபடை வீடுகளில் இரண்டாம் படைவீடாக திகழும் திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலுக்கு உபயதாரர் நிதி மற்றும் திருக்கோவில் நிதியின் மூலம் பெருந்திட்ட வரைவின்கீழ், 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வரிசை முறை, காத்திருப்பு அறை, மருத்துவ மையம், முடிக்காணிக்கை செலுத்தும் இடம், பொருட்கள் பாதுகாப்பு அறை, அன்னதானக்கூடம், பக்தர்கள் தங்கும் விடுதிகள், சுகாதார வளாகம், திருமண மண்டபங்கள், பணியாளர் குடியிருப்பு ஆகிய திருப்பணிகளின் கட்டுமானப் பணிகளை முதல்வர் 28.09.2022 அன்று தொடங்கி வைத்தார். அத்திருப்பணிகளில் 33.25 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்ட முடி காணிக்கை மண்டபம், வரிசை வளாகம், சுகாதார வளாகங்கள், கலையரங்கம், நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் நீரேற்று நிலையம், ஆகியவை கடந்த 14.10.2024 அன்று முதல்-அமைச்சரால் பக்தர்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று 10 கோடியே 57 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 52 அறைகளுடன் கூடிய தங்கும் விடுதியினை பக்தர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்த அரசு பொறுப்பேற்றபின் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் கடந்த 4 ஆண்டுகளில் 11,712 திருக்கோவில்களில் மேற்கொள்ளப்பட்ட 7,006 கோடி ரூபாய் மதிப்பிலான 26,695 பணிகளில் இது வரை 3,526 கோடி ரூபாய் மதிப்பிலான 13,541 பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

மேலும், ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாத சுவாமி திருக்கோவிலில் கைங்கர்யம் பணியிடத்தில் பணிபுரிந்து வந்த 6 திருக்கோவில் பணியாளர்களுக்கு அர்ச்சகர்களாகப் பதவி உயர்வு வழங்கி, அதற்கான ஆணைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வழங்கினார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று வேளாண்மை, உழவர் நலத்துறையின் சார்பில் ரூ.103 கோடியே 38 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள 2 முதன்மை பதப்படுத்தும் மையங்கள், 18 சேமிப்புக்கிடங்குகள், 3 வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், 3 வேளாண் சந்தை நுண்ணறிவு ஆலோசனை மையங்கள், 8 ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள், 10 துணை வேளாண் விரிவாக்க மையங்கள், 2 விதை சேமிப்புக்கிடங்குகள், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், 2 ஒருங்கிணைந்த விதைச்சான்று வளாகங்கள், அலுவலகக்கட்டிடம், மாணவர் விடுதி மற்றும் தரக்கட்டுப்பாடு/பகுப்பாய்வகம் உள்ளிட்ட 52 கட்டிடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் கடலூர் துறைமுகத்தை இயக்குவதற்காக மஹதி கடலூர் போர்ட் அன்ட் மேரிடைம் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும், தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், செயலாளர் இரா.செல்வராஜ், கடல்சார் வாரியத்தின் துணைத்தலைவர் தி.ந.வெங்கடேஷ், துறைமுக அலுவலர் ம.அன்பரசன், மஹதி நிர்வாக இயக்குநர் ரவிசங்கர், இயக்குநர் கல்யாண் சொரூப் ஆகியோர் உடனிருந்தனர்.



● சென்னை கலைவாணர் அரங்கத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் மதுரை உலகத் தமிழ்ச்சங்கத்தின் நான்காவது பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் ந.அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



● அ.தி.மு.க. தலைமைக்கழகத்தில் நேற்று அண்ணா தொழிற்சங்கத்தை சேர்ந்த 171 நலிந்த தொழிலாளர்களுக்கு தலா ரூ.1 லட்சம் வீதம் மொத்தம் ரூ.1 கோடியே 71 லட்சம் நிதியுதவியை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி வழங்கினார். அருகில் முன்னாள் அமைச்சர்கள், நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### அண்ணா தொழிற்சங்கத்தைச் சேர்ந்த

# நலிந்த 171 பேருக்கு தலா ரூ.1 லட்சம் நிதியுதவியை வழங்கினார் இ.பி.எஸ்.

சென்னை, ஜூலை 05-

நலிந்த நிலையில் உள்ள அண்ணா தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர் குடும்பங்கள் உள்ளிட்ட 171 பேருக்கு தலா 1லட்சம் ரூபாய் வீதம் 1 கோடியே 71 லட்சம் ரூபாய் நிதியுதவிகளை அ.தி.மு.க. பொதுசெயலாளர் எடப்பாடி பழனிசாமி வழங்கினார்.

உழைப்போர் திருநாளாம் ``மே'' தினத்தை முன்னிட்டு அ.தி.மு.க.வின் அண்ணா தொழிற்சங்க பேரவையில் உறுப்பினர்களாக உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட நலிந்த தொழிலாளர்கள் மற்றும் மரணமடைந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவால் தொடங்கப்பட்டு, நிதியுதவிவழங்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் அ.தி.மு.க. பொதுசெயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி, நேற்று அ.தி.மு.க. தலைமைக் கழகத்தில் உள்ள எம்.ஜி.ஆர். மாளிகைக்கு வந்தார்.

அங்கு அ.தி.மு.க. அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் மாவட்டங்களில் இருந்தும், புதுச்சேரி, கர்நாடகா, ஆந்திரா, கேரளா உள்ளிட்டபிற மாநிலங்களில் இருந்தும், போக்குவரத்துக் கழக அண்ணா தொழிற்சங்கங்களில்இருந்தும், தேர்ந்தெடுக்கப்பட்ட 171 நலியத தொழிலாளர்களுக்கு நலியத தொழிலாளர்களுக்கு தலா 1,00,000/- ரூபாய்வீதம், மொத்தம் 1 கோடியே 71 லட்சம் ரூபாய் நிதியுதவியை வழங்கினார்,

இந்த நிதி அ.தி.மு.க. அண்ணா தொழிற்சங்க பேரவை வங்கிக்கணக்கில் இருந்து வரைவோலைகளாக வரைவோலைகளாக வழங்கி, அனைவருக்கும் தன்னம்பிக்கையையும், ஆறுதலையும் கூறினார். நிதி உதவியை பெற்றுக் கொண்டவர்கள் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமிக்கு நன்றி தெரிவித்தனர்.



● சென்னை பனையூரில் நேற்று நடைபெற்ற தமிழக வெற்றிக்கழகத்தின் மாநில செயற்குழு கூட்டத்தில் தலைவர் விஜய் பேசினார். இக்கூட்டத்தில் த.வெ.க. நிர்வாகிகள பலர் கலந்து கொண்டனர்.

# ஊட்டச்சத்து வேளாண்மை... (1-ம் பக்க தொடர்ச்சி)

என்னும் புதிய திட்டம் 18 கோடியே 67 லட்சம் ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படும் என்று 2025-26-ம் ஆண்டிற்கான வேளாண்மை – உழவர் நலத்துறை நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

### பழச்செடி தொகுப்புகள்

அந்த அறிவிப்பிற்கிணங்க, ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத்தின் கீழ், மக்களின் அன்றாட காய்கறித் தேவைகளை நிறைவு செய்யவும், வீட்டுத் தோட்டங்களில் காய்கறிகள் வளர்ப்பதை ஊக்குவிக்கும் விதமாகவும் தக்காளி, கத்தரி, வெண்டை, மிளகாய், கொத்தவரை, கீரை வகைகள் போன்ற காய்கறி விதைகள் அடங்கிய 15 லட்சம் காய்கறி விதைத் தொகுப்புகள், விரைவில் பலனளிக்கும் பப்பாளி, கொய்யா, எலுமிச்சை ஆகிய பழச்செடிகள் அடங்கிய 9 லட்சம் பழச்செடி தொகுப்புகள் மற்றும் புரதச்சத்து நிறைந்த மரத்துவரை, காராமணி உள்ளிட்ட பயறு வகைகள் அடங்கிய ஒரு லட்சம் பயறு வகை விதைத் தொகுப்புகள் ஆகியவற்றை விவசாய பெருமக்களுக்கு வழங்கும் வகையில், 5 பயனாளிகளுக்கு காய்கறி விதைத்தொகுப்புகள், பழச்செடித் தொகுப்புகள் மற்றும் பயறு வகைத் தொகுப்புகளை வழங்கி, இப்புதிய திட்டத்தினை தமிழ்நாடு முதல்வர் நேற்று தொடங்கி வைத்தார்.

திறந்து வைக்கப்பட்ட புதிய வேளாண் கட்டிடங்களின் விவரங்கள்: வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் சார்பில் திருவண்ணாமலை மாவட்டம் – குப்பநத்தம் மற்றும் படவேடு ஆகிய இடங்களில் 8 கோடியே 68 லட்சம் ரூபாய் செலவில் 2 முதன்மை பதப்படுத்தும் மையங்கள்; தென்காசி மாவட்டம் – சங்கரன்கோவில், பாவூர் சத்திரம், தூத்துக்குடி மாவட்டம் – கழுகுமலை, விளாத்திகுளம், ஸ்ரீவைகுண்டம், கரூர் மாவட்டம் – கரூர், அரியலூர் மாவட்டம் – ஆண்டிமடம், காஞ்சிபுரம் மாவட்டம் -உத்திரமேரூர், சுங்குவார்சத்திரம், திருப்பத்தூர் மாவட்டம் – திருப்பத்தூர், வேலூர் மாவட்டம் – குடியாத்தம் ஆகிய மாவட்டங்களில் 28 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் 14 சேமிப்பு கிடங்குகளை திறந்து வைத்தார்.

### செங்கல்பட்டு-இராமநாதபுரம்

கோயம்புத்தூர் மாவட்டம் – ஆனைமலை, நேகமம், காரமடை, மலையடிப்பாளையம் ஆகிய இடங்களில் விற்பனைக்கூட நிதியிலிருந்து 8 கோடி ரூபாய் செலவில் 1000 மெ.டன். கொள்ளளவு கொண்ட 4 கிடங்குகள்; தென்காசி மாவட்டம் – ஆலங்குளம், திருவண்ணாமலை மாவட்டம் – ஆதமங்கலபுதூர் மற்றும் நாயுடுமங்கலம் ஆகிய இடங்களில் 14 கோடியே 18 லட்சம் ரூபாய் செலவில் 3 வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்; செங்கல்பட்டு, திருப்பத்தூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் 2 கோடியே 52 லட்சம் ரூபாய் செலவில் 3 வேளாண் சந்தை நுண்ணறிவு ஆலோசனை மையங்களை திறந்து வைத்தார்.

அரியலூர் மாவட்டம் – தா.பழூர், வேலூர் மாவட்டம் – வேலூர், புதுக்கோட்டை மாவட்டம் – புதுக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் – காரியாப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் – நாங்குநேரி, கள்ளக்குறிச்சி மாவட்டம் – திருக்கோவிலூர், திருவண்ணாமலை மாவட்டம் – வந்தவாசி, கிருஷ்ணகிரி மாவட்டம் – கெலமங்கலம் ஆகிய மாவட்டங்களில் 22 கோடியே 65 லட்சம் ரூபாய் செலவில் 8 ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்களை திறந்து வைத்தார்.

### விதை சேமிப்பு கிடங்குகள்

காஞ்சிபுரம் மாவட்டம் – பழந்தண்டலம், களக்காட்டூர், தேனி மாவட்டம் – தேவதானப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம் – அணைக்கரை, திருச்சிற்றம்பலம், சேதுபாவாசத்திரம், திருப்பூர் மாவட்டம் – கோவிந்தாபுரம், அரியலூர் மாவட்டம் – விக்கிரமங்கலம், தென்காசி மாவட்டம் – அச்சன்புதூர், புதுக்கோட்டை மாவட்டம் – கீரமங்கலம் ஆகிய இடங்களில் 5 கோடி ரூபாய் செலவில் 10 துணை வேளாண் விரிவாக்க மையங்கள்; கடலூர் மாவட்டம் – மிராளூர் அரசு விதைப் பண்ணை, கள்ளக்குறிச்சி மாவட்டம் – வடக்கனந்தல் அரசு விதைப் பண்ணை ஆகிய இடங்களில் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் 250 மெ.டன் கொள்ளளவு கொண்ட விதை சேமிப்புக் கிடங்குகள், மதுரை மாவட்டம் – மேலூரில் 1 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம் என மொத்தம் 103 கோடியே 38 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 52 வேளாண் கட்டிடங்களை தமிழ்நாடு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் தலைமையில் துறைசார்ந்த அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதன்மைச்செயலாளர் சா.விஜயராஜ்குமார், ஆணையர் மு.ஆசியா மரியம், வக்பு வாரியத்தின் முதன்மை செயல் அலுவலர் அதாப் ரசூல், சிறப்பு செயலாளர் கலையரசி, துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.